# உறவுகள்
*Uravukal*

கடவுளே! மக்களினத்தார்
உம்மைப் போற்றிப் புகழ்வார்களாக!
தி.பா:67:5


தை மாசி பங்குனி 2023

Amonerie Tamoule catholique Srilankaise 57, Bld de Belleville, 75011 - PARIS - FRANCE.

இதழ் 85

இலங்கைத் தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப்பணியகத்தின் காலாண்டுப் பத்திரிகை





நீங்கள் அவரிடமிருந்து பெற்றுக்கொண்ட அருள்பொழிவால் அனைத்தையும் கற்றுக்கொள்கிறீர்கள்.1யோ27.

# உறவுகள்

Uravukal

2023

**ஆசிரியர்:**

அருட்பணி: போல் மத்தியூ மதன்ராஜ்
பணியக இயக்குனர்

**உதவி ஆசிரியர் குழு:**

திருமதி: றெஜீனா சிவகுமாரன்
திரு: சில்வெஸ்ரர் தம்பிராசா - மறையாசிரியர்
திரு: ஆனந்தன் செபமாலை
திருமதி: தயாளினி வில்லியம் றெஜினோல்ட்
திருமதி: ஏஞ்சல் யேக்கப்
செல்வி: புளோறன்ஸ் யாழ்நிலா

**மறையாசிரியர்:** திரு: ரி. எம். சந்தியாகு



**தொடர்புக்கு:**

« URAVUKAL »
Aumônerie Tamoule Catholique
Srilankaise
Chapelle Notre Dame Réconciliatrice
57, Bld de Belleville
75011 Paris - France

**Tel:** 01 48 06 95 05
**E - mail:** uravukhal.france@gmail.com
**Website:** www.uravukal.org



**வெளியீடு:**
இலங்கைத் தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகம் - பிரான்ஸ்

No
85

2022

**சந்தா விபரம்**
தனிப்பிரதி ஒன்று: 2€
வருடச் சந்தா விபரம்: 20€
ஏனைய நாடுகளுக்கு: 22€

**கணினி வடிவமைப்பு:** றெஜீனா சிவகுமாரன்
www.uravukal.org
இணையதள பதிப்பாசிரியர்


## ஆசிரியர் எண்ணம்

ஆண்டவர் ஆசி வழங்கி உங்களைக் காப்பாராக! ஆண்டவர் தம் திருமுகத்தை உங்கள் பக்கம் திருப்பி உங்களுக்கு அருள் பொழிவாராக. (எண் 6:24, 25)

இறைமகன் இயேசுவின் இனிய நாமத்தில் இறையாசீர் கலந்த புத்தாண்டு வாழ்த்துக்கள் உங்களுக்கு உரித்தாகுக!

புத்தம் புதிய ஆண்டிலே கால் பதித்திருக்கின்றோம். இந்த ஆண்டு குறித்த பல எண்ண அலைகள் நமக்குள் உண்டு. இந்த ஆண்டு எப்படி நகரப் போகின்றது. நம் திட்டங்கள் எல்லாம் நடந்தேறுமோ? நாம் விரும்பித் தேடுகின்றவை கை கூடுமோ? இந்த ஆண்டு எப்படியான சலனங்களைக் கொண்டு வருமோ? பேராபத்துக்கள், இயற்கை அனர்த்தங்கள், தொற்றுநோய்த் தாக்கம் முதலான அங்கலாய்ப்புக்கள்.

ஆனால் புத்தாண்டு திருப்பலியில் நாம் கேட்ட இறைவார்த்தைக்கு ஏற்ப கடவுள் ஆண்டு தொடக்கத்திலே ஆசீரால் நம்மை நிரப்புகின்றார். மகிழ்ச்சி, நிறைவு, நற்சுகம், நலமான வாழ்வு என்ற வாக்குத்தத்தங்களால் நம் வாழ்வை அன்பு செய்கின்றார். ஒருபுறம் இறையாசீரையும், மறுபுறம் அன்னை மரியா—ளின் வழிநடத்துதலையும் தந்து இவ்வாண்டுக்கு நம்மை வழி அனுப்பி வைக்கிறார்.

ஒரு புதிய ஆண்டு நம் கையில் தரப்பட்டிருக்கின்றது. இவ்வாண்டை நாம் எப்படி செலவிடப் போகின்றோம் என்பது நம் ஒவ்வொருவரையும் பொறுத்ததே. புனித இரோணியுஸ் கூறுகின்றார் மனிதன் முழுமையாக வாழ்வதே கடவுளுக்கு மாட்சிமை அளிக்கின்றது. எப்படியும் வாழலாம் என்ற ஏனோ தானோ என்ற வாழ்க்கையும் உண்டு. இப்படித்தான் வாழ வேண்டும் என்ற வரையறைகளோடு கூடிய கட்டுப்பாடான வாழ்வும் உண்டு. இதில் பின்னயதை தெரிவு செய்வதே இவ்வாண்டில் நமது அழைப்பாகிறது.

புதிய ஆண்டில் கால்பதித்திருக்கும் நமக்கு வழங்கப்படும் இறை செய்தியானது யாதெனில் முதலாவதாக நம்பிக்கை கொள்ளுங்கள் என்பதாகும். கடவுள் கைவிடமாட்டார் அவர் நம் சார்பாக எல்லாவற்றையும் செயல்படுத்துவார். எனவே அவரிடம் நம்மை காணிக்கையாக்கி அவர் தயவைக் கேட்க வேண்டும் என்பதாகும். இரண்டாவதாக, கடவுள் எல்லாவற்றையும் பார்த்துக்கொள்வார் என சோம்பியிருக்க முடியாது. நம் முயற்சி, கடின உழைப்பு இவ்வாண்டில் வெற்றிக்கு அவசியமானது. உழைப்பு நம்முடையது அதற்கான விளைச்சல் அவருடையது. மூன்றாவதாக காத்திருப்பு அவசியமானது. பொறுமையோடும் தளராத உள்ளத்தோடும் தக்க வேளையில் கடவுள் நமக்கு வேண்டியதை தாராளமாய்த் தருவார் என்று உறுதியோடு எதிர்நோக்கியிருக்க கற்றுக்கொள்ள வேண்டும் என்பதாகும். இவ்வாறு நம்பிக்கையோடு நம் அன்றாட பணிகளைச் சரிவர செய்தால் தகுந்த வேளையில் நம்மை கடவுள் ஆசீர்வதித்து வழிநடத்தி காத்திடுவார் என்பதில் ஐயமில்லை.

இக்கால ஆண்டு மெதுவாக நகர்ந்து நம்மை தவக்காலத்திற்கு அழைத்துச் செல்ல இருக்கின்றது. எனவே கடந்த ஆண்டின் குறைகளை நிவர்த்தி செய்ய முயற்சிப்போம். இவ்வாண்டில் சில திருத்தங்களை செயல்படுத்த முனைவோம். நாம் நல்ல மனிதர்களாக மாற முயற்சித்தால் கடவுள் நம்மை புனிதர்களாக்கி தம் மாட்சியில் நமக்கு பங்கு கொடுப்பார்.

இறையாசீர் உங்களுக்கு கிடைப்பதாக! அன்னையின் பரிந்துரையில் ஆண்டவர் உங்களை தீங்கின்றிக் காப்பாராக!

**உறவில் நிலைக்கும்,**
**அருள்பணி: போல் மத்தியு மதன்ராஜ் அ.ம.தி.**

# கிருபாவளவன்

## புனித வளனாரின் ஏழு மகிழ்ச்சிகள்!



கிறிஸ்து பிறப்பு விழாவினை மகிழ்வுடன் கொண்டாடிய நாம் **எங்கள் மகிழ்ச்சியின் காரணமே** எனப் புகழ்ப்படுகிற கன்னி மரியாவை நினைவு கூறாமல் இருக்க இயலாது. அவரது "ஆகட்டும்" என்ற சொல் தான் ஆண்டவர் அவனியில் உதிக்க ஆதாரமாய் அமைந்தது. **ஆயினும் அந்த அன்னை மரியாவையும், ஆண்டவர் இயேசுவையும் கண்ணின் மணி போலக் காத்த புனித வளனாரை நாம் ஏன் பலசமயங்களில் மறந்து போகிறோம் என்பது புரியவில்லை.** மீட்பின் வரலாற்றிலும், மீட்பரின் பிறப்பிலும் புனித வளனாரின் பங்கும் அத்தியாவசியமான ஒன்றாய் அமைந்தது என்பதை நாம் முதலில் பதிவுசெய்ய வேண்டும்.

இறைத்திட்டத்தில் தவிர்க்க முடியாதவராய்த் திகழ்ந்த புனித வளனாரின் வாழ்விலும், மரியாவைப் போலவே ஏழு வியாகுலங்களும், ஏழு மகிழ்ச்சிகளும் இருந்தன என்பது கத்தோலிக்க மரபு நமக்குக் கற்பிக்கும் உண்மை. புனித வளனாரின் ஏழு மகிழ்ச்சிகளைக் குறித்துத் தியானிக்க முனையும் எவரும் "மகிழ்ச்சி" என்கிற சொல்லைத் தொல்லையில்லாத நிலை, கவலைகளற்ற களிப்பு, சிரமங்களில்லாத சந்தோஷம்" எனக் கருதிவிடக் கூடாது.

கிறிஸ்துவின் பார்வையிலும், கிறிஸ்தவக் கண்ணோட்டத்திலும் "மகிழ்வு" என்பது ஒரு மாண்பு பொருந்திய மனநிலை. "ஆண்டவரோடு இணைந்து என்றும் மகிழ்ங்கள். மீண்டும் கூறுகிறேன். மகிழுங்கள்" (பிலி. 4:4) என்றழைக்கும் புனித பவுலடியாரின் கூற்றுப்படி உண்மையானதும், நிலையானதுமான மகிழ்வுக்கு அடிப்படை ஆண்டவரோடு இணைந்த வாழ்வும் மனநிலையும் தான்.

எனவே தான், கிறிஸ்து பிறப்பு விழாவுக்காக நம்மைத் தயாரிக்கும் திருவருகைக் காலத்தில் கூட "மகிழ்ச்சியின் ஞாயிறு" என்று ஒன்று கொண்டாடப்படுகிறது. திருவருகைக்கான இளந்தளிர் வளையத்தில் இளஞ்சிவப்பு மெழுகுதிரியை ஏற்றும் திருவருகைக்கால மூன்றாம் ஞாயிறு நம்மை அகமகிழ அழைக்கின்றது. அந்த மகிழ்வுக்கான காரணத்தைத் திருப்பாடல் ஆசிரியர் அழகாகக் கூறுகிறார். "ஆண்டவரை எப்போதும் என் கண்முன் வைத்துள்ளேன். அவர் என் வலப்பக்கம் உள்ளார். எனவே நான் அசைவுறேன். என் இதயம் அக்களிக்கின்றது. என் உள்ளம் மகிழ்ந்து துள்ளுகின்றது." (தி.பா 19: 8,9)

ஆக, கிறிஸ்துவில் மகிழ்வது என்பது துன்பமற்ற நிலையல்ல. தொல்லையற்ற வாழ்வல்ல. ஆண்டவர் அருகில் உள்ளார் என்பதால் ஏற்படும் அசைவுறா நம்பிக்கையும், எதிர் நோக்கும் நிறைந்த ஒரு மனநிலையும், அந்த மனநிலையால் விளைகிற மகிழ்ச்சியும் தான். இந்தப் புரிதல் இருந்தால் தான் புனித வளனாரின் ஏழு மகிழ்ச்சிகளும் நமக்கு அர்த்தப்படும். அவரது ஏழு மகிழ்ச்சிகளும், ஏழு வியாகுலங்களுக்குப் பின் கிடைத்த ஒளிக்கீற்றும், இறைதேடலில் கிடைத்த தெளிவுநிறை பார்வையும் மனநிலையுமே ஆகும்.

### 1.வானதூதரின் செய்தி



தனக்கு நிச்சயிக்கப்பட்ட கன்னி கருத்தாங்கி ஒரு மகனைப் பெறப்போகிறார் என்கிற செய்தி எந்த மனிதருக்கும் களிப்பைத் தராது. கலக்கத்தைத் தான் தரும். அதுவும், நேர்மையாளராகிய யோசேப்புவுக்கு அந்தச் செய்தி இடிவிழுந்தாற்போல் இருந்திருக்கும். அப்போது பெறப்பட்ட வானதூதரின் செய்திதான், யோசேப்புவின் முதல் மகிழ்ச்சி. ஆண்டவரின் தூதர் அவருக்குக் கனவில் தோன்றி "யோசேப்பே, தாவீதின் மகனே, உம் மனைவி மரியாவை ஏற்றுக்காள்ள அஞ்ச வேண்டாம். ஏனெனில் அவர் கருவுற்றிருப்பது தூய ஆவியால் தான்" (மத்1:20) என்கிற செய்தி, யோசேப்பின் மகிழ்வுக்குக் காரணமாய் இருந்தது. செய்தியில் இருந்த தெளிவினாலும் புரிதலினாலும் அல்ல. மாறாக அந்தச் செய்தியை இறைவனின் தெளிவூட்டுதலாக யோசேப்பு தாழ்ச்சியுடனும் அமைந்த உள்ளத்துடனும் ஏற்றுக் கொண்டதால் தான்.

### 2. மீட்பரின் பிறப்பு



தூயஆவியால் கருவுற்று இறைமகனாய் அறிவிக்கப்பட்ட ஒரு மகனை மாடடைக் குடிலில், தரித்திரத்தின் பிடியில் பெற்றெடுக்க நேர்ந்தபோது, யோசேப்பின் உள்ளம் பதைபதைத்துப் போயிருக்கும். அப்போது கிடைத்ததுதான் மீட்பரின் பிறப்பாலும் இடையரின் தொழுகையாலும் கிடைத்த இரண்டாவது மகிழ்ச்சி. "அஞ்சாதீர்கள், இதோ எல்லா மக்களுக்கும் பெரும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தியை உங்களுக்கு அளிக்கிறேன். இன்று ஆண்டவராகிய மெசியா என்னும் மீட்பர் உங்களுக்காகத் தாவீதின் ஊரில் பிறந்திருக்கிறார்." (லூக் 2:10) என்கிற செய்தியை இடையர்கள் எவ்வளவு தூரம் புரிந்திருப்பார்கள் என்பது தெரியவில்லை. ஆனால் யோசேப்பு அதைப் புரிந்து கொண்டு மகிழ்ந்தார், புறச்சூழல் ஆடம்பரமாயும் ஆனந்தமாயும் அமைந்ததால் அல்ல, பிறந்திருப்பவர் எதிர்பார்க்கப்பட்ட மெசியா என்கிற அகப்புரிதலால்.

### 3 இயேசு என்னும் பெயர் சூட்டுதல்



பிறந்த குழந்தைக்கு யூத மரபுப்படி, விருத்தசேதனம் செய்து, பெயர் சூடியபோது தெறித்த இரத்தம் புனித யோசேப்புவுக்கு வேதனையைத் தந்திருக்கும். ஆனாலும் யோசேப்பு அம்மகனுக்கு இயேசு என்று பெயரிட்டபோது (மத். 1:25) மிகவே மகிழ்ந்தார். காரணம் அது தனது இரத்தபந்தத்தின் விளைவு என்பதால் அல்ல, இறைத்தந்தையின் திருவுளத்தின் கனி என்பதால். மரியா தம் மகனைப் பெற்றெடுக்கும் வரை யோசேப்பு அவரோடு கூடி வாழவில்லை (மத் 1:25) என்கிற மறையுண்மை காமக்களிப்பையும் தாண்டிய தூய மகிழ்வு சாத்தியம் என்பதை உரைத்துகிறது.

மிகுதி மறு இதழில்

# ஒன்றிப்பை என்நாளும் உளமார நேசிப்போம்

எப்போதும் இறையொளியில் இணைந்த வண்ணம்குளிர்ந்திருக்க
இறைவனே அழைக்கின்றார் இருகரம் நீட்டி நம்மை!
முப்போதும் நமையாளும் மூவொரு இறைவன் குரல்.
முறையாக நமைஎட்டி முன்னேற அழைக்கிறது!
தப்பேதும் நிகழாமல் தகுந்தவிதம் பேணி நம்மை
தாயுளம் தாங்கிநிதம் தரணியில் காக்கின்றது!
இப்போதே முன்வருவோம் இறைசித்தம் நிறைவேற்ற
இவ்வாண்டு முழுவதற்கும் இறையனைக் குவித்திடுவோம்!

இறைவார்த்தை மறைக்கல்வி இதயம்நிறை அறநெறிகள்
எல்லாமே நமைஒன்றாய் இணைகின்ற கூறுகள்தாம்!
நிறைவாழ்வை நாம் என்றும் நிலைவாழ்வாய் கருதிநின்றால்
நீளாயுள் நாம்பெற்று நிம்மதியாய் வாழ்ந்திடலாம்!
குறைநீக்கும் எண்ணங்கள் குவிந்திட்டால் நம்வாழ்வில்
குணக்குன்றால் உயர்ந்திடலாம் கோபுரமாய் ஒளிதரலாம்!
சிறைவைத்து நம்மையே சிலுவையில் அறைந்துகொண்டால்
சினம்கொண்டு இறைவன்நம் செயல்களை மாற்றிடுவார்!

கிறிஸ்தவம் இந்நாளில் கீழ்த்தரமாய் பிளவுண்டு
கிறிஸ்துவை மறுப்பாரைக் கேலிசெய்ய அழைக்கிறது!
அறிந்து நாம் செய்கின்ற அவலங்கள் இவையன்றோ
ஆளுக்கொரு சபையமைத்து அவற்றிற்கே அழைக்கின்றனர்.
வெறித்தனத்தைக் காட்டிபிற விவிலியக் குழுக்களிடை
வேற்றுமையை வளர்ப்பதையே விட்டுவிடல் நன்றன்றோ!
பறிக்கின்ற உரிமைகளைப் பக்குவமாய் திருப்பித்தந்து
பாரெங்கும் கத்தோலிக்க பட்டொளி வீசச்செய்வோம்!

பிறந்திருக்கும் புத்தாண்டில் போராளியாய்த் திகழ்ந்திடுவோம்
பிறரன்பைப் போற்றிநிதம் பெரும்பணி ஆற்றிடுவோம்!
சிறந்திருக்கும் மாந்தர்களைச் சிந்தையில் கொண்டிடுவோம்.
சீர்மிகுந்த அவர்வாழ்வைச் சிரமதில் ஏற்றிடுவோம்!
பறந்துவிடும் பண்பாட்டைப் பக்குவமாய்ப் பிடித்திடுவோம்.
பக்தியில் இளவல்கட்குப் பரப்பிடுவோம் உலகெங்கும்
மறந்திடுவோம் மற்றவரின் மாபெரும் குற்றங்களை
மன்னிப்போம் அவர்களையே மாபரன் இயேசுவைப்போல்.

ஒன்றிப்பை எந்நாளும் உளமாற நேசிப்போம்
உறவுக்கு வழிவகுக்கும் ஊடகம் அது என்போம்.!
என்றும்நல் வாக்குரைத்து எதிர்வருவோர் அனைவருக்கும்
இனிய நல் சாட்சியாய் இறைவழியைக் காட்டிடுவோம்!
நன்றி என்னும் தீபத்தை நாள்தோறும் ஏற்றிச்செல்வோம்
நற்பண்பு அத்தனையும் நமதாக்க முயன்றிடுவோம்!
சொற்பேச்சைக் கேட்டு மூத்தோர் சுற்றத்தில் வலம் வருவோம்
சோர்வின்றி நலம் செய்து சுதன் வழியில் பயணிப்போம்!



**மறையாசிரியர் தி. ம. சந்தியாகு,**
**வேங்கிடக்குளம் இந்தியா**

# கவிதை வரிகள்

## ஆசை

ஆசை என்று உள்ளே ஒன்று மோசம் செய்யுதே.
அது பூசை என்று வெளியே உன்மேல் பாசம் செய்யுதே.
நாளும் உன்னை நேசிப்பதாய் போடும் வேஷமே
அது நாளுக்கு நாள் நானே எனக்குத் தேடும் நாசமே .
எல்லோருக்கும் நன்மை செய்தோம் என்று தோணுதே.
செய்த ஒவ்வொன்றிலும் சுயநலமே என்ன நாணுதே .
**போதும் போதும் போதும் இந்த போலி நாடகம்.**
**உந்தன் பாதம் ஒன்றே ஆகவேண்டும் எந்தன் தாரகம்.**


உந்தன் பாதம் ஒன்றே ஆக வேண்டும் எந்தன் தாரகம்.
பேரும் புகழும் வேண்டாம் என்று உள்ளம் சொல்லுதே.
பலர் புகழ இன்னும் புகழு என்னும் கள்ளம் வெல்லுதே.
காம கோபம் வென்றோம் என்று வாயும் சொல்லுதே.
உள்ளே விருப்பும் வெறுப்பும் தலை விரித்தே ஆடிச் செல்லுதே .
பசி ருசியை கடந்தோம் என்று மார் தட்டுதே.
இந்தா புசி என்றே தினம் நாக்கும் வயிறும் காலைக் கட்டுதே.
**போதும் போதும் போதும் இந்த போலிநாடகம்**
**எந்தன் மாமுனிவன் பாதம் அல்லால் யாதும் பாதகம்**

சுகத்தை விட மனசு இல்லை உள்ள நிலை இது.
ஆனால் ஜகத்தினையே ஜெயித்ததாக சொல்லி அலையுது.
நன்று செய்த நல்லவரை அன்றே மறக்குது.
இது குன்று போன்ற குறை சுமந்தும் கூசாது இருக்குது.
வந்தவர்க்கே அறிவுரையை வாரி வழங்குது.
இது தன் வாழ்க்கையில் தத்தளித்தே வாடி வதங்குது.
**போதும் போதும் போதும் இந்த போலி நாடகம்**
**எந்தன் மாமுனிவன் பாதம் அல்லால் யாதும் பாதகம்.**

நினைத்தபடி நடப்பதுவே எந்தன் வாடிக்கை.
அது உன் நினைவே என்று சொல்வது என்ன வேடிக்கை
உனக்காகவே வாழ்ந்திடுவேன் என்று பாரிக்கை.
பின் எனக்காக இது செய்! என்று என்ன கோரிக்கை
துறவி என்று கூறிக்கொண்டும் எதையும் துறக்கலை
இந்த பிறவிக்கேனோ ஞானம் ஏதும் இன்னும் பிறக்கலை
**போதும் போதும் போதும் இந்த போலி நாடகம்**
**எந்தன் மாமுனிவன் பாதம் அல்லால் யாதும் பாதகம்.**

# புனிதர் தேவசகாயம் பிள்ளை (தை 14)

**அருட்பணி. ஜெயக்கொடி**



### ஆரல்வாய்மொழி சிறையில் (தொடர்ச்சி)

தேவசகாயத்தின் மனைவி பர்கவியம்மாவும் தேவசகாயத்தை சந்திக்க வந்தார். சந்தித்த வேளையில் அவரின் கண்ணில் கங்கை நதி கரை புரண்டு ஓடியாது. தேவசகாயம் மனைவியை தேற்றினார். இனி திரு விதாங்கூர் சமஸ்தானத்தில் இருக்க வேண்டாம் எனவும் வடக்கன்குளத்தில் வாழவும் அறிவுரை கூறி மனைவியை அனுப்பினார். கண்ணீரோடு பர்கவியம்மா விடைபெற்றார்.

### மரணதண்டனை நிறைவேற்றுதல்

தேவசகாயத்தை இனியும் உயிரோடு விட்டால் கிறிஸ்தவம் இன்னும் அதிகமாக வளர்ந்து விடும் என்ற அச்சம் ஆட்சியாளர்களை தொற்றியது. இதனால் வேகமாக அவரை கொலை செய்ய திட்டம் தீட்டினார்கள்.

1752-ஆம் ஆண்டு சனவரி 14-ஆம் நாள் இரவு இவ்வுலகை விட்டு பிரிய வேண்டிய நேரம் வருகிறது என்பதை அறிந்த நம் மறைசாட்சி, இறைவனிடம் மன்றாடி கொண்டிருந்தார். படைவீரர்கள் காற்றாடிமலை என்னும் பகுதிக்கு இழுத்து வந்த நிலையில் அங்கிருந்து உயர்ந்த மலைக்கு ஏற கட்டாயப்படுத்தினார்கள். உண்ணாமல், உறங்காமல் ஏராளமான கொடிய துன்பங்களை சுமந்து மாவீர் தேவசகாயத்தால் மலையில் ஏற இயலவில்லை. பின்பு அவரை ஒரு கம்பில் கட்டி மிருகங்களை சுமப்பதுபோல் சுமந்து மலை உச்சிக்கு கொண்டு சென்றார்கள்.

இறுதி நேரம் வந்து விட்டது என்பதை உணர்ந்து படைவீரர்களிடம் தனது கடைசி இறைவேண்டலுக்காக நேரம் கேட்டு கடவுளிடம் மன்றாடினார். இறுதி இறைவேண்டலை முடித்த பின் படைவீரர்கள் அவரை மலையில் நிற்க வைத்து துப்பாக்கியால் சுட்ட பொழுது மரண வேதனையுற்ற அவர் “இயேசுவே என்னை மீட்டருளும்” என்று வேண்டினார். மீண்டும் படைவீரர்கள் துப்பாக்கியால் சுட்ட பொழுது இயேசு மரி இவர்களின் இனிய திருப்பெயரை உச்சரித்து அவர் உயிர் இம்மண்ணிலிருந்து பிரிந்தது.


யாரும் மறைசாட்சியின் உடலை கண்டுபிடித்து விடக்கூடாது என்பதற்காக மறைசாட்சியைக் கொன்றவர்கள் அவரது உடலை விலங்குகளுக்கு இரையாக முட்புதருக்குள் வீசினார்கள். கிறிஸ்தவ மறைபணியாளர்கள் தேவசகாயத்தின் உடலை ஐந்து நாட்களுக்கு பிறகு கண்டுபிடித்தார்கள். உடலில் சதைகள் இல்லாமல் வெறும் எலும்புகள் மட்டுமே காணப்பட்டன. கிடைக்கப் பெற்ற உடல் பாகங்கள் அனைத்தையும் எடுத்து வந்து தூய சவேரியார் பேரலாயத்தில் பீடத்தின் முன் அடக்கம் செய்தார்கள். தேவசகாயத்தின் வீர மரணத்தை கேட்டறிந்த கொல்லம் மறை ஆயர் நன்றி வழிபாடும் இறைபுகழ்ச்சி பாடலும் பாடி கடவுளை புகழ்ந்தார்கள். வீர மைந்தனின் வீர மரணத்தை பற்றி மிகச்சிறந்த உரையாற்றினார் கொல்லம் மறை ஆயர். பின்பு ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை உரோமைக்கு அனுப்பப்படும் அறிக்கையில் பல பக்கங்கள் வீரமைந்தனின் வீர மரணத்தை பற்றி எழுதப்பட்டுள்ளது.

### அருளாளர் நிலைக்கு உயர்த்தப்பட்டது

தேவசகாயம் டிசம்பர் 2, 2012 அன்று அருளாளர் நிலைக்கு உயர்த்தப்பட்டார். திருத்தந்தை பதினாறாம் பெனடிக்ட் அவர்களின் இந்திய பிரதிநிதியாக கர்தினால் ஆஞ்சலோ அமாத்தோ நிகழ்வுக்கு தலைமை தாங்கினார். இந்நிகழ்வு கோட்டாறு மறைமாவட்டத்தில் வைத்து நடைபெற்றது.

### புனிதர் நிலைக்கு

அருளாளர் நிலைக்கு உயர்த்தப்பட்டு பீட வணக்கத்திற்குரியவர் என்ற நிலையில், விரைவில் புனிதராக அறிவிக்கப்படுவதற்கான அனைத்து பணிகளும் துரிதமாக நடந்து வருகின்றன. மறை சாட்சியை புனிதராக அறிவிக்க திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் 21-02-2020 அன்று புனிதர் பட்டத்திற்கு பரிந்துரைக்கும் பேராயத்தின் திட்டத்தை ஏற்றுக் கொண்டுள்ளார்.




## இளையோரின் சுவிஸ் பயணம் ~ 2022





# "ஆண்டவருக்கு நன்றி செலுத்துங்கள்"

மறைத்திரு. மரிய அந்தோணிராஜ்,

**திருப்பாடல் 107: 2–3, 4–5, 6–7, 8–9 (1)**



### வேண்டுதல்களும் நன்றியறிதல்களும்:

ஒருமுறை கடவுள் வானதூதர்கள் இருவரை அழைத்து, ஒருவரிடம் மனிதர்களுடைய வேண்டுதல்களையும் இன்னொருவரிடம் மனிதர்களுடைய நன்றியறிதல்களையும் சேகரித்து ஒரு–மாதத்திற்குள் திரும்பி வருமாறு அனுப்பி வைத்தார்.

வேண்டுதலைச் சேகரிக்கப் போன வானதூதரிடம் சிறுவர் முதல் பெரியவர் வரை வேண்டுதலை அடுக்கிக்கொண்டே போனார்கள். இதனால் அவர் கொண்டு சென்றிந்த கூடை பிடிக்கவே இல்லை. இன்னொரு பக்கம் நன்றியறிதலைச் சேகரிக்கப் போன வானதூதரிடம் வெகு சொற்பமாகவே மனிதர்கள் தங்கள் நன்றியறிதலை வெளிப்படுத்தினார்கள். இதனால் அவர் கொண்டு சென்றிருந்த கூடை கொஞ்சமே நிரம்பியிருந்தது.

ஒரு மாதம் கழித்து இரண்டு வானதூதர்களும் தாங்கள் சேகரித்திருந்த வேண்டுதல்களையும் நன்றியறிதல்களையும் கடவுளிடம் வந்து சமர்பித்தார்கள். வேண்டுதல்கள் மலையளவும், நன்றியறிதல்கள் மடுவளவும் இருந்ததைப் பார்த்த கடவுள் அவர்களிடம், " கடவுளாக இருப்பது எவ்வளவு கடினம் என்பது இப்போது உங்களுக்குப் புரிகின்றதா?" என்று வேதனையோடு சொன்னார்.

ஆம், கடவுளிடம் அது வேண்டும், இது வேண்டும் என்று எதையாவது கேட்டுக்கொண்டிருக்கும் நாம் அவருக்கு நன்றி சொல்ல மறப்பது மிகவும் வேதனைக்குரியது. திருப்பாடல் 107 ஆண்டவருக்கு நன்றி செலுத்த வேண்டும் என்ற அழைப்பினைத் தருகின்றது. அது குறித்து நாம் சிந்திப்போம்.

### திருவிவிலியப் பின்னணி:

திருப்பாடல்கள் 105, 106, 107 ஆகிய மூன்று திருப்பாடல்களுக்கும் ஓர் ஒற்றுமை உண்டு. அது என்னவெனில், இம்மூன்று திருப்பாடல்களுமே, " ஆண்டவருக்கு செலுத்துங்கள்" என்றுதான் தொடங்குகின்றது.

திருப்பாடல் 107 நாடு கடத்தப்பட்ட யூதா நாட்டினர் தங்கள் சொந்த நாட்டிற்குத் திரும்பி வந்தபின் பாடிய பாடலாகும். அன்னிய மண்ணில் அடிமைகளாக இருந்த யூதர்களை ஆண்டவர் அவர்களுடைய சொந்த நாட்டிற்குக் கிழக்கிலிருந்தும் மேற்கிலிருந்தும் வடக்கிலிருந்தும் தெற்கிலிருந்தும் அழைத்து வந்தார். அவர்களுடைய நெருக்கடியான வேளையில் அவர்களுடைய வேண்டுதலைக் கேட்டார். அதை விடவும் அவர்கள் தாக முற்றிருந்த வேளையில் தண்ணீரும், பசியாய் இருந்தபோது அவர்களுக்கு உணவும் அளித்தார். அதற்காக அவர்கள் ஆண்டவருக்கு நன்றி சொல்ல அழைக்கப்பட்டனர்.

கடவுள் நம்முடைய வாழ்விலும் பல நன்மைகளைச் செய்திருப்பார். அவற்றையெல்லாம் நினைத்துப் பார்த்து நாம் ஆண்டவருக்கு நன்றி சொல்வோம்.



### சிந்தனைக்கு:


கடவுளிடமிருந்து எவ்வளவு பெற்றுக் கொண்டோம் என்பது முக்கியம் அல்ல, பெற்றுக்கொண்ட நன்மைகளுக்கு நாம் எவ்வளவு நன்றியுடையவர்களாக இருக்கின்றோம் என்பதே முக்கியம். நன்றியுடையோரின் நெஞ்சத்தில் ஆண்டவர் குடியிருக்கின்றார்.

கடவுளுக்கு நன்றி செலுத்துவதால் அவருடைய மாட்சி ஏற்றம் பெறுவதில்லை மாறாக, அது நாம் மீட்படையப் பயன்படுகின்றது.

### இறைவாக்கு:

' எல்லாச் சூழ்நிலையிலும் நன்றி கூறுங்கள்' (1 தெச 5:18) என்பார் புனித பவுல். எனவே, நாம் ஆண்டவருக்கு எல்லாச் சூழ்நிலையிலும் நன்றி கூறி, இறையருளை நிறைவாகப் பெறுவோம்.

### என்னத்தைச் சொல்லுறது?



**ஆசிரியர்**- உன் பெயர் என்னப்பா?
**மாண**- பசுவுக்கு உடம்பு சரியில்லை
**ஆசி**- என்னப்பா சொல்றே புரியலியே
மாண- என் பெயர் "கௌ" சிக் சார்
**ஆசி**- நீங்க தூய தமீழில் பேசி என்னைக் கொல்ல வேண்டாம் ஆங்கிலத்திலேயே சொல்லுங்க.
**மாண**- சரி சார்
**ஆசி**- உங்க அப்பா பேரு என்ன?
மாண- எங்க அப்பா பேரு king cow milk சார்
**ஆசி**- ஏன்டா மறுபடியும் என்னை குழப்புறா? தமிழிலேயே சொல்லித் தொலையடா.
**மாண**- எங்க அப்பா பேரு ராஜ கோபால் சார்
**ஆசி**- ஆள விடுடா சாமி. இனிமே சத்தியமா உன்கிட்ட எதுவுமே கேட்கமாட்டேன்............



# புத்தாண்டே வருக! வருகவே!! 2023

## மலரும் புத்தாண்டே! புது வழிகாட்டிட வந்துவிடு

பாவம் இல்லா தூய வாழ்வில் நிலைத்திருக்கும்
திருச்சபையின் திருத்தூதர்கள் யாவரும்
ஆவியானவரின் அருட்கொடையால் ஊட்டம் பெற்று
திக்கனைத்தும் உள்ள தீவினையை அகற்றும்
ஆற்றல்கள் நிறைந்தோராய் திகழ்ந்திடவும்
உச்சி முதல் பாதம் வரை
இவர் உடல் உறுப்பு அத்தனையும்
படைத்தவரின் நல்லாசியுடன்
பரிபூரண நலம் பெறவும்
கோணலான பாதைகளைச் செவ்வையாக்கி
நேரிய வழிதனிலே நாம் வாழ
நேசக்கரம் விரிப்போர் பெருகிடவும்
மலரும் புத்தாண்டே! நீ புது வழிகாட்டிட வந்துவிடு

இறை வேண்டலின் அவசியத்தை
பார்முழுதும் பறை சாற்றிடவும்
இயற்கையை பேணிக் காப்பதுடன் - இனிவரும்
தலைமுறைகள் அறிவியல் வளர்ச்சி கண்டு
மொழிகளிலே மூத்தவனாய் வீரத்திலே சிறந்தவனாய்
வேதங்களின் வழித்தொடராய் வாழும் எம் தமிழினம்
மென்மேலும் மென்மேலும் தழைத்தோங்கிட
வரம் தரும் புத்தாண்டே! யாவரும் புத்துயிர் பெற்றிட
நீ புது வழிகாட்டிட வந்துவிடு

இல்லிடம் இழந்தோரும் காணாமல் போனோரும்
முகவரி இழந்தோரும் நாள்தோறும்
அகதிகளாய் அலைந்து அல்லலுற்று
எரிமலையாய் குமுறும் என் இனத்தின்
துயர் துடைத்திடவும் நினைப்பவை நடந்திடவும்
எதிர்பார்ப்புக்கள் நிறைவேறிடவும்
அவயத்தின் அவலம் நீங்கி
அனைவருமே அன்பு நெறி தவறாது
அகிலத்தைக் காத்து விடும்
முழுமையான நற் புத்தாண்டாய்
புது வழிகாட்டிட விரைவாய் நீ வந்துவிடு

நாடாளும் தலைவர்கள் இன மத பேதமில்லா
நல்வாழ்வால் நீதி வழுவா நெறியுடனே
மனித நேயம் முழுமை பெற உழைத்திடவும்
வறுமையில் வாழ்வோர் வேதனை நீங்கி
வேண்டியவை கிடைத்து மனநிறைவாய்
வாழ்ந்திடவும்
வலு ஊட்டும் இறைஇயேசுவின் இன் அருளால்
யாவரும் புத்துயிர் பெற்று புதுப்பொலிவுடன் வாழ
வழிகாட்டிட இமைப்பொழுதில் நீ வந்துவிடு

ஆக்கம்: செல்வி சு. லூாசியா மேரி

## படித்ததில் பிடித்தது



**வேலைக்குப் போய் திரும்பி வந்த தன் அம்மாவிடம் 5வயது சிறுமி கேட்டார்.**
நம்ம வீட்டு பீரோ சாவியை வேலைக்காரிக்கிட்ட ஏம்மா கொடுத்திட்டுப் போகல்ல?
அம்மா – அதைப்போய் வேலைக்காறிக்கிட்ட கொடுப்பாங்களா?
சிறுமி– நம்ம வீட்டு பீரோல இருக்கிற நகை, பணம் எல்லாம் ஏம்மா வேலைக்காறிக்கிட்டகொடுத்திட்டு போகல
அம்மா– அதெல்லாம் வேலைக்காறிக்கிட்ட கொடுக்கக்கூடாது.
சிறுமி – உங்க, ATM Card I வேலைக்காறிக்கிட்ட ஏம்மா கொடுத்திட்டுப் போகல.
அம்மா– என்ன கேள்வி இது நீ சொல்வதெல்லாம் ரொம்ப முக்கியமான பொருட்கள். அதெல்லாம் வேலைக்காறிக்கிட்ட கொடுக்கக்கூடாது.
சிறுமி – அபபோ ஏம்மா என்னை மட்டும் வேலைக்காறிக்கிட்ட விட்டுட்டுப் போறிங்க.

# தெரிந்து கொள்ளுவோம்



உறங்கும்போது அடிக்கடி என்னைய பேய் வந்து அமுக்குதுன்னு நிறைய பேரு சொல்லிக் கேட்டுருப்போம்..! அவ்வளவு ஏன்..? நம்மில் பலருக்கும் அந்த அனுபவமும் கூட. இருக்கும்..! அது ஏன்? உண்மையிலயே பேய் தான் வந்து அமுக்குகிறதா..? பாப்போம் வாங்க..!

**மனித உறக்கத்தில் இரண்டு நிலை உண்டு.**

ஒன்று விரைவான கண் அயர் இயக்கம் (RAPID EYE MOVEMENT REM) மற்றொன்று அதற்கு எதிர்பதம் (NonREM NREM).

நீங்க உறங்க தொடங்கியதும் உங்களுக்கு முதலில் நிகழுவது NREM. அடுத்து REM நிகழும்.! இப்படி இரண்டுமே மாறிமாறி நிகழும் தன்மை கொண்டதே மனித உறக்கம். ஒரு REM அல்லது NREM. ன் சுழற்சி 90 நிமிடங்கள் வரை இருக்கலாம். NREM ன் கடைசி கட்டத்திலேயே உங்கள் உடல் முழுமையான உறக்கத்தின் கட்டுப்பாட்டுக்கு வந்து 100% தளர்ந்திருக்கும்.

அப்போது சுயநினைவும் முழுவதும் மங்கியிருக்கும். NREM நிலை முடிந்து REM நிலை தொடங்கும்போது உங்கள் கண்கள் கொஞ்சம் இயங்கும். கனவுகளும் தோன்றும், ஆனால் உங்கள் உடல் இன்னும் தளர்ச்சி நிலையிலேயே இருக்கும்.!

REM சுழற்சியில் இருக்கும் உங்கள் உடல் உறக்கத்தில் இருக்கும்போது...அந்த சுழற்சி முடிவதற்குள் சிலநேரம் உங்களுக்கு சுயநினைவு தோன்றினால்...உங்கள் உடல் 100% REM சுழற்சியில் இருப்பதால் அசைக்க முடியாது.

மூளை விழித்திருக்கும். ஆனால் மூளையின் கட்டளைகளை உடல் உறுப்புகள் ஏற்றுக் கொள்ளும் நிலையில் இருக்காது.

அப்போதுதான் நமக்கு தோணும், "அய்யய்யோ நான் கைகாலை அசைக்க முயற்சி பண்றேன் ஆனா என்னால முடியலயே பேய் வந்து அமுக்குது போல" என்று.!

சிலநேரம் அதற்கு தோதாக நமது மூளையில் நிகழ்ந்து கொண்டிருக்கும் கனவும் பேய் நினைப்புக்கு சென்று ஒரு பேயையும் கனவில் கொண்டு வந்து காட்டும்..!

SLEEP PARALYSIS – என்பதுதான் உங்களை வந்து அமுக்கிய பேய்.!

உண்மையிலயே அது பேய் அல்ல. அது நம் உறக்கத்தில் தோன்றும் ஒரு நிலை.!

உலகமெங்கும் நிறைய மக்களுக்கு இந்த SLEEP PARALYSIS நிகழ்கிறது... அதனால் பயப்பட ஏதும் தேவையில்லை.

உறங்கும்போது பேய் அமுக்குகிறதா? மருத்துவ–மகிமை இது.



# பொங்கலும் ஆதவனும்

விவசாயியின் நம்பிக்கை நட்சத்திர காதலனாம் ஆதவனுக்கு பூமித் தாயின் விளைநிலத்தில் தன் உடல் உழைப்பால் செழித்து விழைந்த நெற்கதிருக்கு நற்கதிராக பூத்து குலுங்கி, கதிராகி, நெல்மணியான அந்த நெற்கதிரின் அறுவடையின் முதற் நெற்கதிரை தன் கரத்தால் எடுத்து நெற்பயிரை வாழவைத்த ஆதவனுக்கு பாசத்துடன் நன்றி மறவாது தன் கையால் புதுப்பானையி லிட்டு புத்தடுப்பில் பால், நெய், சக்கரை கலந்து பொங்கலாக்கி தன் நெற்கதிர் வாழ உயிர் கொடுத்த ஆதவனுக்கு நன்றி மறவாது தன் நன்றியை பகிர்ந்து என் ஆணி வேர்த் தமிழன் காலத்தால் அழியாத பொங்கலிட்டு நெல்மணியால் காவியம் வரைந்து தமிழன் வருடத்தின் முதல் நாளாக பதிவிட்டதே இன்னன்னாள்.

தன் உழைப்பால் உடல் இளைத்து, முதுகு வளைந்து தன் துன்பத்திலும், சோகத்திலும் தன் வேதனையைத் தாங்கி வயல் வரம்பிலும், வாய்க்காலிலும், நிலத்திலும் தன் பாதத்தை பதியவிட்டு, பச்சை பயிர்களாக நிமிர்ந்த நெற்கதிரின் பூரிப்பின் அழகு கண்டு, ஆனந்தத் தாண்டவமாடி, ஆதவனின் கதிர் ஒளியின் அணைப்பில் ஆனந்தமும், தான் உடல் சோர்வுற்று தள்ளாடிய போதும் தான் மழலைக ளாக தாங்கும் நெற்கதிர்களை தலை நிமிரவைத்த ஆதவனை, கரம் தூக்கி நிமிர்ந்து நின்று போற்றி வாழ்த்திய மறத்தமிழன், நன்றி மறவாது தன் குடும்பத்துடன் விழா எடுத்து, தான் நேசித்த தொழிலின் பெருமையை அன்றும், இன்றும் உலக மனித இனத்தின் விழிகளை கமக்காரத் தமிழன் நன்றிமறவாத பாசத்தின் தளிர்கள் என்பதை திரும்பிப் பார்க்க வைத்தான்.


எம் தாய் நிலத்தின் நீர் வளம் நிறைந்த குளங்கள், வளம் செழிக்கும் மண்வளம், வலு நிறைந்த உடல் குடும்பமே வயலில் இறங்கி கரம் கோர்த்து தொழில் செய்யும் அழகான காட்சிகள் நிறைந்த வயல் வெளிகள். மேகங்களை அகற்றி ஆதவனும் தன் வதனம் காட்டி விளை நிலங்களை வாழ்த்தி ஆர்ப்பரிக்கும் ஆனந்தமான கண்கொள்ளாக் காட்சிகள் நிறைந்த எம் தாய் தேசம், எம் கண் முன் இன்றும் நிழலாடுகின்றது. அறுவடையின் விழா, தைப் பொங்கலாக விழா எடுத்து தைப் பொங்கலான நாள் அன்றைய நாள் காலைப் பொழுது விடிவதற்கு முன் குடும்பமாக எழுந்து எல்லோரும் ஆதவனை வரவேற்று, புத்தாடைகள் அனிந்து, புத்தடுப்பில் புதுப்பானையில் பொங்கல் பொங்கி ஆதவனுக்கு நன்றி கூறும் இனிய நாள் அல்லவா இன்நன்நாள்

**மரியதாஸ் லேனு**

**இனிய தமிழ் பொங்கல் நல் வாழ்த்துக்கள்**

# புனித வலன்ரைன் (பெவ்:14)

ரோமாபுரியில் பெயர் பெற்ற குருவாக விளங்கினார் புனித வலன்ரைன். அப்பட்டணத்தில் அரசனாகிய இரண்டாம் கிலாவுத் என்றவனுடைய ஆட்சிக் காலத்தில் வேதத்திற்காக உயிரைக் கொடுத்தவர்களுள் புனித வலன்ரைனும் ஒரு–வர். அந்த அரசன் காலத்தில் அவனது கட்டளைப்படி சேவகர் புனித வலன்ரைனைப் பிடித்து அவனிடம் கொண்டு போய் விட்டபோது அரசன் அவரைப் பார்த்து **நீர் பெரியவராய் இருக்கையிலே நம்முடைய தேவர்களை விட்டு இயேசுவின் புது வேதத்தைக் கேட்கலாமோ** என்றார். இதற்கு புனித வலன்ரைன் **பரலோகத்தையும் பூலோகத்தையும் படைத்த இயேசுநாதர் பிதாவோடும் தூய ஆவியோடும் ஏக மெய்யான தேவனே அல்லாமல் வேறு தெய்வமில்லை என்று நீர் அறிந்தால் பாக்கியமுள்ளவராய் இருப்பீர்** என்றார். அரசன் முன் இருந்தவர்களுள் ஒருவர் அதைக் கேட்டு புனித வலன்ரைனைப் பார்த்து உம்முடைய தேவர்களை யார் என்று நினைக்கிறாய் என்றார். அதற்கு புனித வலன்ரைன் **உங்களுடைய தேவர்கள் தங்கள் சீவியத்தை மோகங்களிலும் சிற்றின்பங்களிலும் போக்கி அனேக பாவங்களைச் செய்ததினாலே பொல்லாத மனிதர்களாய் இருந்தார்கள்** என்றார்.



அதைக் கேட்ட அந்த நபர் வலன்ரைன் தேவ தூசணம் சொல்கிறான் என்று மிகக் கோபத்துடன் கூச்சலிட்டான். இதனையெல்லாம் அரசன் கண்டும் வலன்ரைன் மீது கோபித்துக் கொள்ளாமல் அவர் சொன்ன வேத வசனங்களைக் கேட்டு அவருக்கு நல்ல வார்த்தைகளைச் சொன்னார். உடனே கூச்சலிட்டவர் அதைக் கண்டு **ஐயையோ இவன் அரசனுக்கே மயக்கம் வருவித்து விட்டான் என்று சாக்குக் கூறி எங்கள் தாய் தந்தையர், பாட்டன் பாட்டிமார் பின்பற்றிய எங்கள் வேதத்தை விட்டு விடலாமோ** என்றான். அரசன் அந்த வசனத்தைக் கேட்டு கலங்கி கலாபனைக்கு அஞ்சி வலன்ரைனை அவரிடத்தில் ஒப்புவித்து இவன் தான் சொல்லுகிற காரியங்களை செய்யாதிருந்தால் தண்டிக்கவும், செய்திருந்தால் தண்டிக்கத் தேவையில்லை என்றும் கூறினான். உடனே அவர் வலன்ரைனை ஏற்றுக்கொண்டு அவரை நடுவரிடத்தில் ஒப்புவித்தான்.

நடுவர் வலன்ரைனை தன் வீட்டிற்கு அழைத்துப் போனார். அப்போது வலன்ரைன் அவருக்கு முன்னால் சர்வேசுரனை மன்றாடி மக்களுக்கு ஞான ஒளியாகி தம்முடைய ஏக குமாரன் இயேசுநாதரைக் கொண்டு பிற மக்களுக்கு ஞான ஒளியை தந்தருள வேண்டுமென்று பிராத்தித்தார். இதைக் கண்ட நடுவர் அவரை நோக்கி சொன்னதாவது. **நீ இப்போது சொன்ன காரியத்தை சோதிக்க வேண்டும். இரண்டு வருடமாக கண் தெரியாதிருக்கின்ற என் சுவிகார மகளுக்கு இயேசுவின் திரு நாமத்தைச் சொல்லி கண் பார்வை பெற்றால் இயேசுவின் ஞான ஒளி உண்மை என்பதை நான் உணர்ந்து கொள்வேன்** என்று கூறி தனது மகளைக் கொண்டு வந்து அவர் முன் விட்டான். அப்போது வலன்ரைன் தமது இரு கைகளையும் அந்த பெண்ணின் கண்ணின் மேல் வைத்து வேண்டிக் கொண்டதாவது: மெய்யான ஒளியாகிய இயேசுவே இவளுக்கு ஒளி தந்தருளும் என்று சொன்னவுடனே அவளுக்கு புதுமையால் பார்வை கிடைக்கப் பெற்றது.

நடுவரான இப் பிள்ளையின் சுவிகாரத் தகப்பன் இதைக் கண்டு இயேசுவின் வேதம் மெய்யான வேதம் என்று விசுவசித்து புனிதவலன்ரைன் சொற்படியே தனது வீட்டில் இருந்த பொய்யான தேவர்களுடைய விக்கிரகங்களை உடைத்து தன்னோடு சேர்ந்தவர்களாகிய 46 பேரும் திருமுழுக்குப் பெறும்படி செய்தார். இந்த சேதியை அறிந்த அரன்மனையினர் அவர்கள் எல்லோரையும் பிடித்து பற்பல வாதைக்குட்படுத்தினார்கள். அவர்கள் எல்லோரும் விசுவாசத்திற்கு துரோகம் பண்ணாமல் வேத சாட்சிகளானார்கள். புனித வலன்ரைனும் அனேக நாட்கள் காவலில் இருந்த பின்பு கொடுமையாக அடிக்கப்பட்டு அரசன் கட்டளைப்படி தலை வெட்டப்பட்டு மரித்தார்.

இப்படியாக 270ம் வருடம் பெப்ரவரி மாதம் 14ம் திகதி வேதசாட்சியாக பாக்கியமான மரணத்தை அடைந்ததினாலே அன்றைய தினத்தில் இவரது தினமாக கொண்டாடப்படுகின்றது.

## காதலர் தினம் தோன்றிய வரலாறு

**காதலர் தினத்தை இன்றைய கால கட்டத்தில் உலகம் முழுவதிலும் உள்ள காதலர்கள் கொண்டாடி வருகின்றார்கள். பெப்ரவரி மாதம் 14ம் திகதி இத் தினம் கொண்டாடப்படுகின்றது. இத் தினமானது தோன்றியது எப்படி? அறிந்து கொள்வோம்.**

லூப்பர் காலியா என்ற திருவிழாவை ரோமானியர்கள் கொண்டாடி வருகின்றார்கள். பெப்ரவரி மாதம் 14ம் திகதி மத்திய இங்கிலாந்தில் பறவைகள் மூலமாக ஜோடிகளைத் தேர்வு செய்து ஆங்கிலேய பழமை வாதிகளோடு இந்த நாளைக் காதலர் தினமாக கொண்டாடியதாகவும் தெரிய வருகின்றது. இருந்தாலும் ரோமானிய அரசனின் ஆட்சிக்காலத்திலே காதலர் தினம் தோன்றியதற்கான சாட்சிகள், சான்றுகள் இருக்கிறதாக வரலாற்று ஆய்வாளர்கள் கூறுகின்றார்கள்.

கிளாடிஸ்மிமி ஆட்சி புரிந்தபோது தனது படைவீரர்களுக்கு முட்டாள் தனமாக ஒரு உத்தரவு பிறப்பித்தானாம். அந்த அரசனுடைய நடவடிக்கையால் படையில் சேர பலர் தயங்கினார்கள். திடிரென்று ஒரு நாள் அவர் அமைச்சர்களை வரவ ழைத்து ரோமாபுரி நாட்டில் இனி யாருமே திருமணம் செய்யக்கூடாது என்று உடனடியாக அறிவிக்கும்படி கட்டளையிட்டான். இதனால் ஏற்கனவே நிச்சயம் செய்யப்பட்ட திருமணங்களும் ரத்து செய்யப்படுகின்றது. இதை மீறுபவர்கள் கைது செய்யப்படுவார்கள், இருட்டறையில் அடைக்கப்படுவார்கள். பின்பு பொது இடத்தில் அவர்கள் கல்லால் அடித்துத் தலை துண்டிக்கப்பட்டு கொல்லப்படுவார்கள் என்றும் கூறினான். இதைக் கேட்ட ரோமானியர்கள் அதிர்ச்சிக்குள்ளா னார்கள். திருமணமானவர்கள் மனைவியைப் பிரிந்து வரத் தயங்கினார்கள். காதலர்கள் காதலியைப் பிரிந்து வரத் தயங்கினார்கள். இது இரண்டும் இல்லாவிட்டால் படையில் சேருவார்கள் என்று அரசன் நினைத்து விட்டான்.

பாதிரியார் வலன்ரைன் என்பவர் அரசனின் இந்த அறிவிப்பை மீறி ரகசியமாக திருமணங்களை நடாத்தி வைத்தார். இதனை அறிந்த அரசன் பாதிரியார் வலன்ரைனைக் கைது செய்து சிறையில் அடைத்து மரண தண்டனையும் நிறைவேற்றப்பட்டது. இடைப்பட்ட காலத்திலே சிறையில் இருந்த பாதிரியார் வலன்ரைனுக்கும் சிறைக் காவல் தலைவன் மகள் அஸ்தோரியசுக்கும் காதல் மலர்ந்தது. வலன்ரைனை விடுவிக்க அஸ்தோரியஸ் முயற்சி செய்தாள். இது தெரிந்த சிறைத் துறைத் தலைவன் மகளை வீட்டு சிறையில் அடைத்தான். எல்லாக் காவலையும் மீறி ஒரு காகித அட்டையில் செய்தி ஒன்று அனுப்பி வைத்தார் வலன்ரைன். அது தான் முதல் காதலர் தின வாழ்த்து அட்டையாக இருக்கும் என்பதாக வரலாறு கூறுகின்றது. இந்தக் கடிதத்தைப் படிக்கும் போது அந்த நேரத்தில் வலன்ரின் கல்லால் அடிக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டு தலை துண்டிக்கப்பட்டு கொலை செய்யப்பட்டார். அந்த நாள் 270ம் வருடம் பெப்ரவரி மாதம் 14ம் தேதி.

பாதிரியார் வலன்ரைன் ரோம் மக்களின் மனங்களிலே நீங்காத நினைவுகளாக நிறைந்து நின்றார். ரோமானியர்களுடைய ஆலயங்கள் ஐரோப்பியர்களுடைய கட்டுப்பாட்டுக்குள் வந்தபோது ' வகான்' விடுமுறை தினமாக அறிவிக்கப்பட்டது. இது தான் ' **வலன்ரைன் டே**' என்று கொண்டாடப்படுகின்றது. சுமார் 200 வருடங்களுக்குப் பின்பு போப் ஜலாசியஸ்மி அவர்களால் பாதிரியார் வலன்ரைன் புனிதராக அறிவிக்கப்பட்டார்.







# மலைப்பாம்பும் மான் குட்டியும்

தொடர்ச்சி

“ ஆமாம்.... ஏன் அழுகிறாய்” என்றது குறட்டி.

மான் தனது அழுகையை நிறுத்திவிட்டு உறுதியான குரலில் சொன்னது.

“ இப்போது சாவு என்பது நிச்சயமாகி விட்டது. சாகும் முன்னர் அம்மாவின் உயிரைக் காப்பாற்றிய பெருமையாவது என்னைச் சேரும். நீங்கள் மனது வைத்தால் எனக்கு உதவலாம்” என்றது.

“ நான் எப்படி உதவ முடியும்?” என்றது.

“ மொட்டச்சி அம்மன் பாறைக்குச் சென்று நாவல் பழங்களை எடுத்து என் அம்மாவிற்கு கொடுத்துவிட்டு மீண்டும் இங்கு வந்து சேருகிறேன். பின்னர் உன் இஷ்டப்படி என்னைக் கொன்று சாப்பிடு” என்றது மான்.

“ நீ மீண்டும் என்னிடம் திரும்பி வருவாய் என்பதற்கு என்ன உத்திரவாதம்?”

“ நான் சொல்வதில் உனக்கு நம்பிக்கை இல்லை என்றால் நீ என் கூடவே வா.. நாவல் பழங்களை என் தாயிடம் சேர்த்ததும் நீ என்னைக் கொன்று சாப்பிடு”

“ உன்னை விட்டால் என்னால் பிடிக்கமுடியாது? உன் வேகம் என்ன, என் வேகம் என்ன?” என்றது குறட்டி.

“ என் மீது நம்பிக்கை இல்லை என்றால் நீ என்ன சொல்கிறாயோ, அதற்கு நான் கட்டுப்படுகிறேன்”

“ நான் உன் உடலை சுற்றியபடியே இருப்பேன். என்னை சுமந்த படியே செல்ல வேண்டும்” என்று சொன்னது குறட்டி. அது அதற்கு ஒத்துக் கொண்டது. குறட்டியை சுமந்தபடியே சென்றது மான்.

மொட்டச்சி அம்மன் பாறையில் நாவல் பழங்களை சேகரித்துக் கொண்டது. மலைப்பாம்பு தன் உடலைச் சுற்றியிருக்க உற்சாகத்துடன் நடந்தது. தனது அம்மாவுக் காக தன்னுடைய உயிரைக் கொடுக்க ஒரு வாய்ப்பு கிடைத்தது, அதற்கு சந்தோஷமாக இருந்தது. மான் தன் இருப்பிடத்திற்கு அருகாமையில் வந்தது. தன் இருப்பிடத்தையும் படுத்துக்கிடக்கும் அம்மாவையும் காட்டியது. குறட்டி அதன் உடம்பிலிருந்து மெல்ல இறங்கியது.

“ நாவல் பழங்களைக் கொடுத்துவிட்டு தப்பிக்கலாம் என்று நினைத்தால்.... அப்புறம் நோய் வாய்ப்பட்டிருக்கும் உனது அம்மா எனக்கு உணவாக நேரிடும்” என்றது குறட்டி.

“ நீ செய்த உதவியை ஒரு நாளும் மறக்க மாட்டேன். என் வார்த்தையை மீறமாட்டேன்” என்று சொல்லிவிட்டு துள்ளி ஓடியது மான் குட்டி.

குறட்டி மெல்ல ஊர்ந்து மரங்களின் ஊடே மறைந்து கொண்டது. அங்கு அதற்கு பெரிய அதிர்ச்சி காத்திருந்தது. அங்கு பதினை ந்து இருபது மான்கள் உடல் நலம் விசாரித்த படி இருந்தன.

அதில் இரண்டு மூன்று மான்கள் ஒன்று சேர்ந்தால் கூட அவற்றின் கொம்புகளால் தனது தலையைக் குத்திக் கிழித்து விட முடியும்.

இப்படித்தான் சென்ற வாரம் ஒரு மலைப்பாம்பை இரண்டு பெரிய மிளா மான்கள் கொம்பினால் நசுக்கி எடுத்துவிட்டன. அந்த மலைப் பாம்பு அங்கேயே உயிரை விட்டது. பயம் என்றால் என்னவென்று தெரியாத குறட்டிக்குக் கூட கொஞ்சம் நடுக்கமாக இருந்தது.

“ கையில் கிடைத்ததை விட்டு விட்டோமோ?” என்று கூட ஆதங்கமாக இருந்தது. எதற்கும்ஜாக்கிரதையாக இருப்பது நல்லது. குறட்டி பெரிய தனது உடலை வளைத்து நெளிந்தபடி மறைவிடம் நோக்கி நகர ஏதோ அரவம் கேட்டது. அதே மான்குட்டி தனியாக வந்தது.

“ என் கடமை முடிந்தது... எனது வார்த்தையை நான் காப்பாற்றி விட்டேன்... உனக்கு எனது நன்றி” என்று சொன்னவாறு குறட்டியின் முன்னால் வந்து நின்றது மான்குட்டி.

குறட்டியின் முரட்டுத் தோலையும் மீறி அதன் உடல் புல்லரித்தது.

“ என்னைப் பற்றியா சொன்னாய்” என்றது குறட்டி

“ இல்லை எனக்கு உதவி செய்த உன்னை காட்டிக் கொடுக்க மாட்டேன்.”

“ உன்னை கொன்று தின்னப் போகும் நான் எப்படி உனக்கு உதவியவன் ஆவேன்?”

“ நீ சொன்னது சரிதான்.. ஆனால் நீ உதவாவிட்டால் என் அம்மாவைக் காப்பாற்ற முடியாது போயிருக்கும். பெற்றோருக்காக தனது உயிரைத் தருவதைவிட பெருமை தரக்கூடிய விஷயம் உலகத்தில் வேறு என்ன இருக்க முடியும்?”

குறட்டி தனது தலையை மெல்ல உயர்த்தி மான்குட்டியின் கண்களில் வழிந்த கண்ணீரைத் துடைத்தது.

“ தாய்க்காக தனது உயிரை தரத்துணிந்த உன்னை வணங்கினாலே ....எனக்குப் பெருமை” என்று சொல்லியபடி குறட்டி அதனை உயிரோடு விட்டுச் சென்றது.

முற்றும்



தேவநாயகம் விஜானா

## சின்னக் கரங்களே!

இப்பகுதியை அலங்கரிக்க உங்கள் கைகளால் வரைந்த வண்ணச் சித்திரங்களை எதிர்பார்க்கின்றோம். எனவே தயங்காமல் உங்கள் சித்திரங்களை எமக்கு அனுப்ப மறவாதீர்கள்......





எனது பெயர் வைஷ்ணா.
எனது அப்பாவின் பெயர் தேவநாயகம்.
எனது அம்மாவின் பெயர் ஜெனட்.
எனது அக்காவின் பெயர் விஜோனா.
எனது தங்கையின் பெயர் தெஷ்னா.
எனது வயது பதினொன்று.
நான் 6° படிக்கின்றேன்.
எனக்கு பிடித்த பாடம் french, கணிதம்.
நான் வயலின், ஆங்கிலம், ரெனிஸ், பிசின் போன்ற வகுப்புகளிற்கு போகின்றனான்.



எனது பெயர் - ஜெனுசிகா
எனது அப்பாவின் பெயர் - பேணாட்
எனது அம்மாவின் பெயர் - றணா
எனது வயது பதினாறு
நான் Lycée première générale படிக்கிறேன்
எனக்கு பிடித்த பாடம், Maths, English
எனக்கு பிடித்த விளையாட்டு Basketball
எனக்கு 1 அண்ணா, 1 தங்கை இருக்கிறார்கள்
அண்ணாவின் பெயர் யோர்தி.
தங்கையின் பெயர் ஜெபினா



எனது பெயர் மதிவின்
எனது அப்பாவின் பெயர் - டனாஸ்
எனது அம்மாவின் பெயர். அமலபூட்சினா
எனது வயது - 12
நான் college 5ème படிக்கிறேன்
எனக்கு பிடித்த பாடம் - Maths
எனக்கு பிடித்த விளையாட்டு - football
எனக்கு 1 தம்பி 1 தங்கை
தம்பியின் பெயர் மதீவன்
தங்கையின் பெயர் டவினா

## அசாத்திய ஆற்றலோடு விளங்கிய 10 புனிதர்களில்

## 1வது புனிதர்

முதலில் குப்படினோ நகரைச் சேர்ந்த புனித யோசப்.

வானில் ஒரு பறவை போன்று பறக்கக்கூடிய ஆற்றல் கொண்டவர். (Power of flight)

தனது மனதை ஆழமாகப் பதிக்கும் ஒன்றால் தொடப்பட்டு புவியீர்க்கும் சக்தியைத் தாண்டி ஆகாயத்தில் பறவை போன்று உயரமாக எழும்பி பறந்து செல்வார். அவரின் மனதை மரியன்னையின் பாடல்கள், மரியன்னையின் சுரூபம், ஆலய மணியோசை, நற்கருணை எழுந்தேற்றம், திருப்பலி என்று தனது மனதைத் தொடும் ஒன்றால் தொடப்பட்டு ஆகாயத்தில் உயரமாகப் பறந்து செல்வார்.

தன்னுடைய 17 வருட வாழ்வில் 70 முறை ஆகாயத்தில் இது போன்று பறந்ததாக ஆவணங்கள் சான்று பகர்கின்றன.

இதன் பொருட்டு ஏராளமான பிரச்சினைகள், எதிர்ப்புக்களை சந்தித்தார்.

திருப்பலியில் தொந்தரவு செய்கிறார், பக்தியோடு பங்கெடுக்க முடியவில்லை என இவரைப்பற்றி ஆங்காங்கே எதிர்ப்புக் குரல்கள் ஒலித்தன. இருப்பினும் இறைவன் இவருக்களித்த தனிப்பட்ட வரமாகவே திருச்சபையும் இறைமக்களும் கொண்டாடினார்கள்.

இவருடைய புனித பட்டத்திற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டபோது நேரடியாக கண்ட பலர் உண்மைத்தன்மையை உறுதி செய்ய சாட்சிகளாக முன்வந்தனர்.

திருச்சபை இவரை விமானிகளின் பாது காவலராக அர்ப்பணித்துக் கொண்டுள்ளது.

## சிரி.....சிரி.....சிரி....



கணவன் - சொறி டார்லிங் இன்னிக்கு வீட்டுக்கு வர முடியாது போலிருக்கு

மனைவி - ஏன்?

கணவன் - கார்ல எவனோ ஸ்டியரிங், அக்சிலேட்டர், கிளச், பிரேக் எல்லாவற்றையும் திருடிற்றுப் போய்ட்டாங்க.


மனை- தண்ணி அடிச்சிருக்கியா?

கண- கொஞ்சம் லைட்டா அடிச்சிருக்கேன்.

மனை- மூதேவி முதலில் பின் சீட்டிலிருந்து முன் சீட்டில போய் உட்கார்ந்து காரை எடுத்துக்கிட்டு எவன் மேலேயும் மோதாமல் வந்து தொலை.

## தனது 86வது பிறந்த நாளை நன்றியுடன் நினைவு கூரும் எங்கள் அன்பிற்குரிய திருத்தந்தைக்கு இனிய பிறந்தநாள் நல்வாழ்த்துக்கள்!

**17.12.2022.**




வாழும் காலத்துப் புனிதர் நம் திருத்தந்தை. ஏழ்மை, தாழ்ச்சி, கீழ்ப்படிவு, பணிவு, என இவரிடம் பல நற்குணங்களை நாம் கற்றுக்கொள்ள வேண்டும். உடல் ஆரோக்கியத்துடன் வாழவும் உங்கள் இறைபணி தொடரவும் ஒரு ஆயனாக இருந்து மந்தைகளாகிய எம்மை வழிநடத்தியருளும் தந்தையே ஆமென்

## அமலமரித்தியாகிகள் துறவறசபையின் புதிய உயர் மேலாளரும் அவருடைய ஆலோசகர்களும்.



# அனைத்துப் புனிதர்கள் தினம்
















# 2022 ல் நடைபெற்ற இலங்கை ஆன்












# மீகப் பணியகத்தின் ஒளிவிழாவின் பதிவுகள்



















# பணியகத்தின் சில பதிவுகள் - 2022







**4–12–2022** அன்று இலங்கைத் தமிழ் ஆன்மீகப் பணியகத்தில் புனித சூசையப்பர் கழகம் உருவாக்கப்பட்டது. பழமை இன்றி புதுமை என்றும் வாழாது, பழமையின் முதிர்வு சில தருணங்களில் தளர்வடைகிறது, அது காலத்தின் நியதி, அதனையும் கடந்து, புது மிடுக்குடன் உருவாகியிருக்கும் புனித சூசையப்பர் கழகமானது இறைவனின் ஆசியுடனும் தூய ஆவியாரின் உடனிருப்பாலும், அன்னை மரியாவின் பரிந்துரையாலும் அவர்கள் முன்னெடுக்கும் நகர்வுகளில் சிறந்து விளங்கிட மனதார வாழ்த்துகிறோம். பாராட்டுகின்றோம். இதற்கு அடித்தளமிட்ட அருட்தந்தைக்கு வாழ்த்துகளும் நன்றிகளும் உரித்தாகுக

# மன்னார் மறைமாவட்ட ஆயர்

## ஜனாதிபதி சந்திப்பு!



கடந்த நவம்பர் மாதம் பதினாறாம் திகதி மன்னார் மறைமாவட்ட ஆயர் பிடெல்ஸ் லயனல் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை உள்ளிட்ட குழுவினர், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை ஜனாதிபதி அலுவலகத்தில் சந்தித்தனர். இந்நிகழ்ச்சியில் அருட்தந்தை ஜொய்ஸ் பெப்பி சொசைய், அருட்தந்தை ஆண்டனி சொசைய் ஆகிய அருட்தந்தையர்கள் கலந்து கொண்டனர்.

நீண்ட காலமாக நிலவிவரும் காணிப் பிரச்சினைகள் உள்ளிட்ட பல பிரச்சனையான விடயங்கள் தொடர்பில், ஜனாதிபதியோடு கலந்துரையாடப்பட்டது. இவை தொடர்பில் கேட்டறிந்து கொண்ட ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, அப்பிரச்சினைகளுக்கு தீர்வு காண நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்தார்.

வருடம் தோறும் இலட்சம் மக்கள் கலந்து கொள்ளும் மடுத்திருப்பதிக்கு வரும் பக்தர்களுக்கு, தேவையான வசதிகளை செய்து தருவது தொடர்பிலும் விசேட கலந்துரையாடல் இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது .

# நோய் தடையாக இருக்கையில்......



### நோய் தடையாக இருக்கையில் பணி ஓய்வுக்கு ஏற்கனவே கையெழுத்து

1965ஆம் ஆண்டில், திருத்தந்தை புனித ஆறாம் பவுல் அவர்களும் அவரது தலைமைப்பணிக் காலத்தில், இதே மாதிரியான பணி விலகல் கடிதத்தைக் கொடுத்தார் – திருத்தந்தை பிரான்சிஸ்.

உலகளாவிய கத்தோலிக்கத் திருஅவையின் தலைமைப் பணியை ஆற்றுவதற்கு, தனது உடல்நலம் தொடர்ந்து கடுமையான தடையாக இருக்கும் பட்சத்தில், அப்பணியிலிருந்து விலகிக்கொள்வேன் என்று கையெழுத்திட்ட கடிதத்தை, தான் அப்பணிக்குத் தேர்வு செய்யப்பட்டபோதே கர்தினால் ஒருவரிடம் கொடுத்து விட்டேன் என்று, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இஸ்பானிய தினத்தாள் ஒன்றிடம் அறிவித்துள்ளார்.

ABC என்ற புகழ்பெற்ற இஸ்பானிய தேசிய தினத்தாளுக்கு அளித்துள்ள பேட்டியில், நலவாழ்வுப் பிரச்சனைகள் அல்லது ஒரு விபத்தால் திருத்தந்தை திடீரென மாற்றுத்திறனாளியாக ஆகிவிட்டால் என்ன நடக்கும் என்ற கேள்விக்குப் பதிலளித்தபோது இவ்வாறு கூறியுள்ளார், திருத்தந்தை பிரான்சிஸ்.

2013ஆம் ஆண்டில் தனது தலைமைத்துவப் பணியைத் தொடங்கியக் காலக்கட்டத்திலேயே அப்போதைய திருப்பீடச் செயலர் கர்தினால் தர்ச்சீசியோ பெர்த்தோனே அவர்களிடம், தனது பணி விலகல் குறித்த கடிதத்தில் கையெழுத்திட்டு கொடுத்துவிட்டேன் என்றும், அதனை அவர் யாரிடம் கொடுத்தார் எனத் தெரியவில்லை என்றும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கூறியுள்ளார்.

உரோம் ஆயர், மற்றும், கத்தோலிக்கத் திருஅவையின் மேய்ப்பர் என்ற தலைமைப் பணியை ஆற்றுவதற்கு உடல்நலம் தடையாக இருக்கையில் அப்பணியிலிருந்து விலகிக்கொள்வேன் என்று எழுதி கையெழுத்திட்டு கொடுத்த அக்கடிதம் குறித்து வெளியிடவேண்டும் என விரும்புகிறீர்களா என்று கேட்டதற்கு, அதனால்தான் அது குறித்துச் சொல்கிறேன் என்றும், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தெரிவித்துள்ளார்.

1965ஆம் ஆண்டில், திருத்தந்தை புனித ஆறாம் பவுல் அவர்களும் அவரது தலைமைப்பணிக் காலத்தில், இதே மாதிரியான பணி விலகல் கடிதத்தைக் கொடுத்தார் என்பதையும் திருத்தந்தை இப்பேட்டியின்போது நினைவுகூர்ந்தார்.

யாராவது ஒருவர் கர்தினால் பெர்த்தோனே அவர்களிடம் சென்று, தங்களின் அக்கடிதத்தைக் கொடுக்குமாறு கேட்டால், அவர் ஒருவேளை புதிய திருப்பீடச் செயலர் கர்தினால் பியெத்ரோ பரோலின் அவர்களிடம் கொடுத்திருப்பார் என்று புன்னகைத்துக் கொண்டே கூறியுள்ளார், திருத்தந்தை பிரான்சிஸ்.

தனது பணிவிலகல் கடிதம், உக்ரைன் போர், வத்திக்கானின் தூதரகப்பணி, திருஅவையில் சிறார் எதிர்கொள்ளும் உரிமைமீறல்கள், பெண்களின் பங்கு, புதியதொரு திருத்தந்தையைத் தேர்வுசெய்யும் வருங்கால கான்கிளேவ் அவைகள், முன்னாள் திருத்தந்தை 16ம் பெனடிக்ட், ஜெர்மன் திருஅவை, Marseilleல் நடைபெறவிருக்கும் மத்தியகிழக்கு சந்திப்பில் கலந்துகொள்வது, Opus Dei குறித்த Motu Proprio என பல்வேறு தலைப்புக்களில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், ABC இஸ்பானியத் தினத்தாளுக்கு அளித்த பேட்டி டிசம்பர் 18, ஞாயிறு காலையில் வெளியிடப்பட்டது.

# பணியகத்தின் 28வது ஆண்டு ஒப்புரவு அன்னை விழா





















# முகத்தில் உள்ள கரும்புள்ளிகள் நீங்க

## முகம் அழகாக இருக்க

- வாழைப்பழத்தை மசித்து பால் கலந்து முகத்தில் பூசி, சில நிமிடங்கள் கழித்து தண்ணீரால் கழுவினால், முகம் பொலிவு டன் காணப்படும்.
- பாதாம் பருப்பு, தேன் மற்றும் தயிர் ஆகியவற்றை சம அளவு எடுத்து முகத்தில் தடவி சிறிது நேரம் கழித்து கழுவினால், முகத்தின் பொலிவு அதிகரிக்கும்.
- தேன் மற்றும் பால் கலந்து முகத்தில் பூசி சிறிது நேரம் கழித்து கழுவினாலும், முகம் பொலிவுடன் காணப்படும்.
- கோதுமை தவிடுடன் பால் கலந்து கரும்புள்ளிகள் உள்ள இடத்தில் தடவி வர சிறிது நாட்களில் கரும்புள்ளிகள் மறைந்து விடும்.
- தேன் மூன்று டேபிள் ஸ்பூன் எடுத்துக் கொண்டு அத்துடன், ஒரு டீஸ்பூன் லவங்கப்பட்டை தூள் கலந்து கரும்புள்ளிகள் உள்ள இடத்தில் தேய்த்து, சிறிது நேரம் கழித்து வெதுவெதுப்பான நீரால் கழுவினால் கரும்புள்ளிகள் மறையும்.
- முருங்கை இலைச்சாறு, எலுமிச்சை சாறு மற்றும் தேன் கலந்து தடவினால், கரும்புள்ளிகள் நீங்கும். அதே போல் பப்பாளி பழத்தை மசித்து தேன் கலந்து முகத்தில் தடவினாலும், நல்ல பலன் கிடைக்கும்.
- ரோஜா இதழ் மற்றும் பாதாம் பருப்பை அரைத்து முகத்தில் தேய்த்து, சிறிது நேரம் கழித்து கழுவி வர, கரும்புள்ளிகள் மறையும்.
- கடலை எண்ணெய் மற்றும் எலுமிச்சம் பழச்சாறு சம அளவு கலந்து அவற்றை கரும்புள்ளிகள் உள்ள இடத்தில் தேய்த்து 15 நிமிடங்கள் கழித்து கழுவலாம்.
- உருளைக்கிழங்கு சாறை தடவி சிறிது நேரம் கழித்து கழுவி னால், கரும்புள்ளிகள் மறையும்.
- எலுமிச்சை சாறு மற்றும் கிளிசரின் கலந்து கரும்புள்ளிகள் மீது தடவி வர, அவை நாளடைவில் மறைந்து விடும்.
- வெள்ளரிச்சாறு, புதினா சாறு, எலுமிச்சை பழச்சாறு ஆகியவைகளை சம அளவில் கலந்து முகத்திலுள்ள கரும்புள்ளிகள் மீது தேய்த்து வந்தால் கரும்புள்ளிகள் போய்விடும்.
- முட்டையின் வெள்ளைக் கருவை நன்றாக அடித்து, முகத்தில் தேய்த்து காய்ந்ததும், அவற்றின் மீது தண்ணீர் தடவி தேய்த்தால், கரும்புள்ளிகள் நீங்கும்.
- முட்டைகோசுடன் பன்னீர் ரோஜாவை மசித்து அதில் பால் மற்றும் தேனை கலந்து முகத்தில் தேய்த்து சில நிமிடங்கள் கழித்து கழுவ வேண்டும். இவ்வாறு வாரம் ஒரு முறை செய்தால், கரும்புள்ளிகள் நீங்கும்.
- சந்தனத் தூள் மற்றும் மஞ்சள் தூள் சம அளவுடன், பால் கலந்து பேஸ்ட் போல் குழைத்து கரும்புள்ளிகள் உள்ள பகுதிகளில் தடவி, காய்ந்த பின் தண்ணீரால் கழுவ வேண்டும்.
- தக்காளி மற்றும் வெள்ளரிக்காயை நன்கு நைசாக அரைத்து முகத்தில் பூசி சிறிது நேரம் கழித்து கழுவ வேண்டும். இவ்வாறு அடிக்கடி செய்து வந்தால், கரும்புள்ளிகள் ஏற்படுவது தடுக்கப்படும்.

# பிரான்ஸ் - இலங்கைத் தமிழ் கத்தோலிக்க பணியகத்தால் வறிய மாணவர்களுக்காக கணனி மையய 1ம் கட்ட கட்டிட ஆரம்பம்








### அரிய நிகழ்வுகள் ஆற்றிவரும் புள்ளி விபரங்கள்

உலகின் பல இடங்களில் பல காலகட்டங்களில் உயிரையும் பணயம் வைத்து இளையோர் தனித்தும் இணைந்தும் ஆற்றிய துணிவுமிக்க நடவடிக்கைகளால்

- இரண்டாம் உலகப் போரில் ஜப்பானில் நகரங்களில் அணுகுண்டுத் தாக்குதலுக்கு உள்ளான போது நடைபெற்ற நிவாரணப் பணிகள்.
- இந்தியாவில் மத்தியப் பிரதேசம் போபாவில் ஏற்பட்ட **விஷ**வாயு தாக்குதலில் பாதிக்கப்பட்டோருக்கு அளிக்கப்பட்ட முதலுதவி மற்றும் சிறப்புப் பணிகள்
- 2004 இல் உலகின் பல பகுதிகளில் ஏற்பட்ட சுனாமியால் பாதிக்கப்பட்ட சிறப்பு காப்பாற்றுப் பணிகள்.
- போர்கள், கடல் சீற்றங்கள், விபத்துக்கள், பெருவெள்ளங்கள், புயல்கள், போராட்டங்கள் ஆகியவற்றால் ஏற்பட்ட சேதங்களின்போது நிகழ்ந்த நிகழ்வுகள் அத்தனைகளிலும் உதவிக் கரங்களாகத் திகழ்ந்ததில் இளையோரின் பங்கு 65–74 % என்று புள்ளி விபரம் கூறுகிறது. இப்படி ஆபத்துச் சமயங்களில் மட்டுமல்ல முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளாகக் கூட முன்மதியுடன் நன்மதிகொண்டு தங்களை அர்ப்பணித்தவர்களும் இளையோர் என்றால் அது மிகையாகாது.

### இம்மையில் செம்மை என்பது இன்றைய அவசரத் தேவை!

இம்மை என்பது நாம் இப்போது வாழ்கின்ற இந்த உலகம் தான். இங்கு நடைபெறுபவைதான் பிறரால் தங்கள் புலனால் அறியக்கூடியவை. அதனால்தான் திருத்தூதர் யோவான் “ தம் கண்முன்னேயுள்ள சகோதரர் சகோதரிகளிடம் அன்பு செலுத்தாதோர், கண்ணுக்குப் புலப்படாத கடவுளிடம் அன்பு செலுத்த முடியாது” (யோவான் 4:19–21) என்று திண்ணமாகக் கூறுகின்றார். அந்த அன்பு இருந்தாலே

(1) தம்மைச் செம்மைப்படுத்த பிறரிடம் விட்டு விடுவதும்

(2) பிறரைச் செம்மைப்படுத்த முனைந்து செயல்படுவதும் நடைமுறைச் சாத்தியமாகும். செம்மைப்படுத்துதல் என்பது ஒழுங்குபடுத்துதல் மட்டுமன்று. செம்மைப்படுத்த வேண்டிய நிலையில் இருப்போர் மீது கனிவுப்பார்வை நிலையில் இருப்போர் மீது கனிவுப் பார்வை கொண்டு அவர்களிடம் எந்த விதமான நிபந்தனைகளையும் முன்வைக்காமல், இனி நமது தனிக்கவனம் தமக்குத் தேவையில்லை என்று தனி மனிதர், குழுமம், குடும்பம், சமுதாயம் உணருகின்ற வரை உடனிருந்து உதவும் அரிய பண்பு ஆகும். இந்நிலை இன்று உலகில் இங்கு அங்கு என்றில்லாமல் இந்த வயது அந்த வயது என்றில்லாமல் எல்லா இடங்களிலும் எல்லா அமைப்புக்களிலும் பரவிக்கிடக்கின்றது. ஆனால் என்ன பரிதாபம் என்றால் பலரது உண்மையான தேவை நிலை யார் கண்களிலும் படாமல் போய்விடுகிறது.

### நல்ல சமாரியர்கள் தான் நவீன இளையோர்.

வெறும் ஆபத்துக்கு உதவும் ஆற்றல் பெற்றவர்கள் அல்லர் நம் இளையோர்.

* உலகத்தைத் துருவி ஆராய்ந்து அவர்கள் நிலைக்கு 1. இரங்கி 2. இறங்கி சொற்களாலும் செயல்களாலும் உதவுவோர் இளையோர்.
* ‘ குருவி உட்காரப் பனம்பழம் விழுந்ததுபோல்’ தற்செயலாக நிகழும் நற்செயல்களுக்குத் தாங்கள் தான் காரணம் என்று தம்பட்டம் அடிப்பவர்களும் அல்லர் இளையோர்.
* இளைஞர் இயேசுவைத் தம்முள் தாங்கி அவரது நன் முன்மாதிரியை பாடமாக ஏற்று அவரது வழியில் அறப்பணி புரிபவர்களே இளையோர்.
* உலகத்தால் தங்களை மாசுபடுத்திக் கொள்ளாத மனத்திடன் கொண்டவர்கள் இளையோர்.
* நீரானது தான் விழும் நிலத்தின் தன்மையைப் பெறுவது போல இளையோரும் தங்கள் இல்லத்தின் மாண்பு எள்ளளவும் சிந்தாமல், சிதறாமல், மங்காமல் மறையாமல் அதனைக் காக்கக் கடமைப்பட்டவர்கள் .

இளையோர்,

**“ காண முயல் எய்த அம்பினில் யானை பிழைத்த வேல் ஏந்தல் இனிது”**

என்ற திருக்குறள் (772) கூறுவதைப் போல் எளிய செயல்களில், சாதனைகளில் அரிய சாதனைகளில் தங்களை அடையாளப்படுத்த வேண்டும். அதாவது முயல் வேட்டைக்குப் போய் வெற்றியோடு திரும்புவதை விட யானை வேட்டைக்குப் போய் கையிலிருந்த வேலையும் இழந்து வருவதில்தான் இலக்குத் தெளிவு இருக்கிறது. அதுபோல இளையோரும் முயன்று நல்ல அரிய சாதனைகளைச் செய்வர்.

- தீமை செய்து துன்புறுவதை விட கடவுளுக்குத் திருவுளமானால் நன்மை செய்து துன்புறுவதே மேலானது என்று திருவிவிலியம் தெளிவாகக் கூறுகிறது.
- செம்மைப் படுத்தும் வாய்ப்புக்கள் குவிந்துள்ளன பயன்படுத்திக்கொள்வதில்தான் இளையோரது இறையாண்மை வெளிப்படுகின்றது.

### செம்மையாகுங்கள் – செம்மைப்படுத்துங்கள்.

குருடர் ஒருவர் இன்னொரு குருடருக்கு வழிகாட்ட முடியாது. அம் முயற்சியில் இறங்கினால் இருவரும் குழியில் விழ நேரிடும். எனவே செம்மைப்படுத்தும் இளையோர் தம்மைச் செம்மைக்கு உட்படுத்திக்கொள்ள வேண்டும். **செம்மைப்படுத்த விழைவோர் எல்லாச் சூழ்நிலைகளிலும் இறை வேண்டல் வழியாக இறைவனோடு உடனிருக்கும் இளையோராய் இருப்பது அவசியம்.**

என்ன? அன்புத் தம்பி தங்கைகளே! இனிய இளையோரே!! முதலில் செம்மைப்படுத்தும் பணி உங்களது இல்லத்தில் தொடங்கட்டும். பிறந்திருக்கும் புத்தாண்டு உங்களுக்கு ஏராளமான அருள் வளங்களையும் ஆசிகளையும் வழங்கி துணை நிற்பதாக. **வாழ்த்துக்கள்!**

இளையோர் களம்

# இம்மை வாழ்வைச் செம்மை செய்வதில் இளையோர்

வேதியர் பேரா. தீ. ம. சந்தியாகு வேங்கீடக்குளம், இந்தியா

## செம்மை செய்வதா?

அவர் இளம் அருள் பணியாளர். அவர் குருவாக அருள் பொழிவு செய்யப்பட்டு ஐந்து ஆண்டுகளில் ஆறு பணியிடங்களுக்கு மாற்றம் பெற்றவர். இப்போது ஆறாவது பணித்தளமாகிய அந்தப் பேரூருக்கு வந்திருக்கிறார். இதுவரை சென்ற ஐந்து இடங்களிலும் அவரது பணியைத் தொடர முடியாமையால் மாற்றப்பட்டாலும் இப்போது அவர் அந்த இடத்தின் தேவையை முன்னிட்டே அங்கு அனுப்பப்பட்டுள்ளார்.

இன்றுடன் இரண்டு வாரங்கள் முடிந்துவிட்டன. அவரது எந்த முயற்சிக்கும் அந்த ஊரில் நல்ல பதிலளிப்பும் பங்களிப்பும் இல்லை. இல்லங்கள் சந்தித்தார். இனிய இசையை ஒலி பரப்பினார். ஓர் உணவு ஒன்றுகூடலுக்கும் அழைப்பு விடுத்தார். எதற்கும் மறுமொழி எந்த வடிவத்திலும் இல்லை. முயற்சியை விட்டுவிடாமல் இரண்டு மாத கால அளவுக்குள் மூன்று முத்தான திட்டங்களைச் செயல்படுத்த முடிவெடுத்தார்.

1) 24 மணி நேரமும் விளையாட்டரங்கம்; அனுமதி இலவசம், வல்லுநர் குழுக்கள் வழியாக அவற்றை நடத்துவது, ஏரா–ளமான பரிசளிப்பது.
2) பிரச்சினை உள்ளவர்களை மட்டும் அழைத்து 24மணி நேர ஆற்றுப் படுத்துதல் மையம் (Councelling)
3) இணையத்தள பயிற்சி மையம்.

இந்த அறிவிப்புக்களுக்கும் எந்தப் பயனும் பத்து நாட்களாக இல்லை. பின்னர் படிப்படியாக இளையோர் (ஆண்–பெண்) வரத்தொடங்கினர். அந்த அருள்பணியாளரின் ஆற்றல்களை உற்று நோக்கினர். அவரில் பற்றுக்கொண்டனர். ஏராளமாக அவரிடமிருந்து கற்றுக்கொண்டனர். அவர்கள் வழியாக சிறார்களும் முதியோரும் வரத்தொடங்கினர். அங்கே இறையாட்சி விருட்சமாக வடிவெடுத்தது. இரண்டே ஆண்டுகளில் ஏராளமான அமைப்புக்கள் உருவாயின. ஆன்மீக செயல்பாடுகள் விரிந்தன. சமூக செயற்பாடுகள் குறைந்தன. அரசு முதல் தனியார் வரை அனைவரது பார்வையும் அந்த அருள்பணியாளரின் மீது விழுந்தது. அந்தப் பணித்தளம் அனைத்துத் துறைகளிலும் பெருவளர்ச்சி கண்டது. மேய்ப்புப்பணி ஆய்வுக்கு வந்த மறைமாவட்ட ஆயர், வேந்தர், முதன்மைக்குரு ஆகிய அனைவரும் வியந்து நின்றனர். ஆறு ஆண்டுகளுக்குப் பின்னர் அவர் பணித்தள மாற்றம் பெற்றபோது “ எங்களது இம்மை வாழ்வைச் செம்மையுறச் செய்த செம்மல்” என்று நற்சான்று அவருக்கு அளிக்கப்பட்டது. இது உண்மை நிகழ்வின் விரிவாக்கம்.

**எப்படி நிகழ்ந்தது இந்த அதிரடி மாற்றம் என்ற ஆராட்சியில் இறங்கிய குழுவினர் கண்டுணர்ந்த பதில்:**

இளையோரின் புரிதலும், அவர்களது அதிரடி நலமான முன்னேற்றச் செயல்பாடுகளும், அவர்களது செய்திப் பரப்புரைகளும் அவர்களது நிபந்தனையற்ற பங்களிப்பும் தான் காரணம்.

## இளையோர் கையில் எந்திரமா? மந்திரமா?

அது ஓர் பேரூர். அதன் முக்கிய பகுதியில் தீ விபத்து. பல வீடுகள் எரிந்து சாம்பலாகும் அபாயம். பக்கத்தில் பெருநகர்களிலிருந்து தீயணைப்பு வண்டிகள் வரவழைக்கப் பட்டன. ஆனால் அவை வந்தும், உள்ளே புகுந்து தீயை அணைக்கும் முயற்சியை மேற்கொள்ளவில்லை. சற்று தள்ளியே அந்த வண்டிகள் நிறுத்தப்பட்டிருந்தன். ஏனெனில் தீயின் தீவிரத்தால் அவர்களால் நெருங்க முடியவில்லை. சேதம் சற்று அதிகமாகும் பயங்கரமான சூழல். அப்போது யாரும் எதிர்பாராத நேரத்தில் ஒரு தீயணைப்பு வண்டி அந்த தீ விபத்து இடத்திற்குள் புகுந்து அணைக்கத் தொடங்கியது. நிலமை கட்டுக்குள் வந்ததும், மற்றவர்களும் தங்களது வண்டிகளை ஓட்டி தீயை முற்றிலுமாக அணைக்க முடிந்தது. இந்நிலையில் முதலில் அத்தீயில் புகுத்திய தீ அணையப் பாடுபட்ட ஓட்டுணருக்கு ஏகப்பட்ட பாராட்டுக்கள். இருபத்தையாயிரம் ரூபாய் பண முடிப்பும் அப்பகுதி மக்களால் அவருக்கு வழங்கப்பட்டது. ஒரு தொலைக்காட்சி நிலையச் செய்தியாளர் அந்த ஓட்டுணரை அணுகி,

“ உங்களது தியாகம் நிறைந்த துணிச்சலைப் பாராட்டுகிறோம். இந்த ரூபா 25,000 த்தை எதற்குப் பயன்படுத்த இருக்கிறீர்கள்?” எனறு கேட்டார். அதற்கு அந்த அற்புத செயலைச் செய்த ஓட்டுனர், “ நான் ஓட்டிய அந்த வண்டியில் திடீரென்று பிரேக் வேலை செய்யவில்லை. அப்படி வேலை செய்திருந்தால் நானும் மற்றவர்களைப் போல வெளியில்தான் என் வண்டியை நிறுத்தியிருப்பேன். எனவே உடனடியாக நான் அந்தப் பணத்தை பிரேக்கை சரி செய்ய செலவழிப்பேன்” என்றார். ஆம் அவரது அந்த நல்ல செயல் தற்செயலாக கடவுள் பேரருளால் நடந்ததுதான். இங்கே அந்த இளைஞர் ஓட்டுணரிடம் எந்திர முடுக்கும் இல்லை. மந்திர–தந்திர செயல்பாடுகளும் இல்லை. ஆனால் எந்த நேரத்தில் யாரைக் கொண்டு எப்படிப்பட்ட நற்செயலை ஆற்ற வேண்டும். குறிப்பாக அதற்கு இளையோரைப் பயன்படுத்த வேண்டும் என்ற இறைத்திட்டம் நிறைவேறியுள்ளது. கடவுளின் கரங்களில் கருவியாகச் செயல்பட இளையோர் தயார் நிலையில் இருக்க வேண்டும்.



# இருமுனை இடைச்சிந்தனைகள்

அருட்பணி. ஜெயசீலன் சவேரியார் பிச்சை ச.ச.

வாழ்க்கைமேல் கட்டுக்கடங்கா கோபம். கடவுளிடம் சொல்கிறான், முறையிடுகிறான். துன்பம், துயரம், நிம்மதியின்மை, வறுமை, வாட்டம், ஏமாற்றம் இவைகள் தான் எனது வாழ்வை அலங்கரிக்கும் செல்வங்கள். எதை கையில் எடுத்தாலும் தோல்வி, முயற்சிகளும் காற்றடைத்த பைகளாக மாறிவிட்டன, துரோகங்களால் துரத்தப்பட்டு துவண்டு விட்டேன், வாழ்வின் எல்லைக்கே வந்துவிட்டேன், என்றான்.

கண்ணீரோடு முறையிட்ட அவன்மேல் பரிவுகொண்டார் கடவுள். உனக்கு என்ன வேண்டும், கேள் தருகிறேன் என்று சொல்ல, மறுகணமே நான் செல்வச் செழிப்பில் வாழ வேண்டும் என்றான். கேட்டது கிடைத்து. அதிவேகத்தில் மிகப்பெரிய செல்வந்தன் ஆனான். தனது வாழ்க்கை முறையையே மாற்றிவிட்டான். வீட்டைச் சுற்றி மதில் சுவர்கள், வீட்டிற்குள் உல்லாச தோரணைகள், வீட்டிற்கு வெளியே மகிழ்ந்து, வீட்டிற்கு மேல் நீச்சல் குளம் என்று வாழ்க்கையை வீட்டிலேயே அடக்கிவிட்டான். வீடே சிறு உலகமாக மாறிவிட்டது. வாழ்க்கையின் உச்சத்திற்கே சென்றுவிட்டான். மகிழ்ச்சி வெள்ளத்தில் மிதந்தவன், செல்வத்தை கொடுத்த கடவுளை மறந்தான், நட்பினை அள்ளித்தந்த நண்பர்களை இகழ்ந்தான், உறைவிடம் நல்கிய உறவுகளைத் துறந்தான், அருகிலிருந்து உதவிக்கரம் நீட்டிய அண்டை வீட்டாரை அடியோடு வெறுத்தான். சிறிதுகாலம் அகால மகிழ்ச்சி, பிறகு மெதுவாக எட்டிப்பார்த்தது தனிமை. பணம் இருந்தாலும் பாசம் இல்லை. பதவி இருந்தாலும் பண்பு இல்லை. மனம் இருந்தாலும் குணம் இல்லை. மார்க்கம் இருந்தாலும் மாற்றம் இல்லை. செல்வம் இருந்தாலும் சொல் இல்லை. ஆட்கள் இருந்தாலும் உறவு மனிதர்கள் இல்லை. தனிமையில் வாடிய அவன் கடவுளை நினைக்கின்றான், மீண்டும் செல்கிறான், பழைய வாழ்வைக் கேட்டு கையேந்தி நிற்கிறான்.

இருப்பதில் இன்பம் இல்லை, இல்லாததில் இரட்டிப்பு இருப்பு. இருப்பதை மறப்பதும், இல்லாததை நினைப்பதும் நமது இயல்பாக மாறிக் கொண்டிருக்கிறது. பகல் கனவுகளால் வாழ்க்கை பக்கங்களைப் புரட்டுவது, அவற்றிற்கு செயல்வடிவம் கொடுக்காமல் கடந்து செல்வதும் இங்கு வாடிக்கை. ஏழை, பணக்காரனின் செல்வத்திற்கு ஏங்கி நிற்பதும், பணக்காரன், ஏழையின் மன நிம்மதியை நாடி நிற்பதும் எதார்த்தம். ஒருகோடியில் நிற்பவன் மறுகோடியில் தன்னை இழப்பதும் மறுகோடியில் நிற்பவன் ஒருகோடிக்காக தன்னை துறப்பதும் வாடிக்கை. அன்பனே! இக்கரைக்கு அக்கரை பச்சை என்பதை மறந்துவிட வேண்டாம். வாழ்க்கைக்கு பல பரிணாமங்கள் உண்டு, பரிணாமங்களுக்கு பல பாதைகள் உண்டு, பாதைகளுக்கு பல அர்த்தங்கள் உண்டு, அர்த்தங்கள் ஒவ்வொன்றும் வாழ்வின் படிப்பினைகள். இன்றையவற்றை வெறுத்து மற்றொன்றைப் பற்றிக்கொள்வது வளர்ச்சியல்ல, வீக்கம். ஒட்டுமொத்த வளர்ச்சியை விதைப்பதுதான் வீரிய வாழ்க்கை. ஒருமுனை சிந்தனைகள் நம்மை பின்னோக்கி இழுத்துச்செல்லும். இருமுனைகளுக்கு இடையே பயணிப்பதுதான் நமது சிறப்பு. முதலுக்கும் முடிவுக்கும் இடையே ஓடும் ஓட்டம்தான் வாழ்க்கை. ஆனால் நமது ஆசை என்னவென்றால் முடிவில் நிற்க. இடைநிற்றல்தான் வாழ்க்கை என்பதை உணர்வோம். இருமுனை இடைச்சிந்தனைகள் நம்மை ஆளுமைப்படுத்தும். ஒருமுனையிலிருந்து மறுமுனைக்கு தாவுவது, பிறகு ஒரு முனையை மறப்பது சறுக்கும் வாழ்வுக்கு எடுத்துக்காட்டு. இரு முனைகளுக்கு. இடையிலுள்ள பயணம் தான் வாழ்க்கை. அது இருமுனைகளையும் உள்ளடக்கியது.

வாழ்க்கைக்கு இரண்டு பக்கங்கள் உண்டு. இருப்பதும் இல்லாததும் இணைந்ததுதான் வாழ்க்கை, கனவும் நினைவும் சேர்ந்தால் தான் மெய்மை, பகல், இரவு இருந்தால்தான் நாட்கள், சொல்லும் செயலும் கலந்தால்தான் உண்மை, வளைவும் நெளிவும் பிணைந்தால்தான் சாலை. அதுபோல இன்பமும் துன்பமும், ஏற்றமும் ஏமாற்றமும், எதிர்ப்பும் எதிர்பார்ப்பு, பாசமும் கோபமும் வாழ்க்கையின் முக்கிய செல்வங்கள். துன்பங்களால் துவண்டுவிடுவது, ஏமாற்றங்களால் எகிறி விழுவது, இயலாமைகளால் தன்னை இழப்பது ஒருமுனை வாழ்க்கை, அதை கோழைத்தனம் என்றுதான் நான் சொல்வேன்.

வாழ்க்கை ஓர் ஓட்டம். அது ஒரு தொடர் ஓட்டம். ஓட்டத்தில் தடைகள் உண்டு, தர்மங்களும் உண்டு, அனைத்தையும் எதிர்கொண்டு ஓட்டத்தைத் தொடர்வதுதான் வாழ்க்கையின் இரகசியம் தடையில்லா ஓட்டம், தரம் இல்லா ஓட்டம். தடைகள் வரும்போதுதான் தன்னம்பிக்கை தலைதூக்கும். தன்னம்பிக்கை வாழ்க்கையின் இரு பக்கங்களையும் சமநிலைக்கு கொண்டு செல்லும். ஒருமுனையில் நிற்பது, தேங்கி நிற்கும் வாழ்க்கைக்கு எடுத்துக்காட்டு.

இருமுனைகளுக்கும் இடையே உள்ள வாழ்க்கை. இருமுனைகளுக்கும் தொடர்பை ஏற்படுத்திக் கொடுப்பதோடு மட்டுமில்லாமல் அவற்றைக் கொண்டாடவும் நமக்குக் கற்றுக் கொடுக்கும். இருமுனைகள் இணைவதில்தான் முழுமை, பிரிவதில் தனிமை மட்டுமே. எதிர் எதிர் முனைகளுக்காக ஆசைப்படாது தடைகளை எதிர்கொள்ளும் சக்தியை நமதாக்குவது, நம்மை நாமே செதுக்குவதற்கு சமம். நமது அன்றாட இறைவேண்டலும் அதுபோல்தான் இருக்கவேண்டும். எதிர் முனைகளுக்காக அல்ல மாறாக, இருமுனை. இடைச் சிந்தனைகளுக்காக! தீவினை அச்சம் நம்மை புடை சூழப்படவேண்டும். இல்லையேல் நம்மிடம் தகவல்கள் இருக்கும் ஆனால் தரம் இருக்காது கல்வி இருக்கும்.

ஆனால், கற்றல் இருக்காது அறிவு இருக்கும், ஆனால் அறம் இருக்காது அனுபவம் இருக்கும், ஆனால் ஞானம் இருக்காது. அறம் செய்ய நாம் விரும்ப வேண்டும். அது மற்றவரின் புகழுக்காக, விளம்பரத்திற்காக, புகைப்படத்திற்காக, செய்தித் தாளின் தலையங்கத்திற்காக பின் பலன்களுக்காக அல்ல. மாறாக, நல் உலகம் படைக்க நன்மையை நிலைநாட்ட எட்டுத் திசைகளிலும் ஆண்டவரின் அருள் வழிகளை உணர்த்த. இறை அச்சம் ஞானத்தின் தொடக்கம் என்கிறது நீதிமொழிகள் 1:7. இறைவன்மேல் பற்று இல்லாமல் ஞானம் எப்படி பிறக்கும்? ஆக அறத்தோடு வாழவேண்டுமென்றால் இறைப்பற்று. இன்றியமையாதது. இறைவனோடு பயணிக்கும்போது அறம் நம்மை ஆளுமை செய்யும். அறம் செய்ய விரும்பும்போது ஞானம் நம் வசம்!

# புதிர் தோட்டம் 84

1. ஆளில்லாத வீட்டு வாசலில் அவன்மட்டும்அமர்ந்திருப்பார் அவன் யார்?
2. ஒட்டியவன் ஒருவன் பிரித்தவர் இன்னொருவன் அது என்ன?
3. உருவத்தில் சிறியவன் உழைப்பில்பெரியவன் அவன் யார்?
4. ஒரே வயிற்றில் பிறந்தாலும் ஒருவன் நடப்பான் ஒருவன் ஓடுவான் அது என்ன?
5. பிடித்தால் போதும் மழையில் நனைந்து வெயிலில் காய்ந்து காப்பாற்றும் அது என்ன?
6. அள்ள முடியும் ஆனால் கிள்ள முடியாது அது என்ன?
7. வெட்டிக்கொள்வான் ஆனாலும் ஒட்டிக் கொள்வான்யார்?
8. அதட்டுவான், அலறுவான் ஆனால் கோட்டையை விட்டு வரமாட்டான் அவன் யார்?
9. ஓடியாடி வேலை செய்தபின் மூலையில் ஒதுங்கிக் கிடப்பான் அவன் யார்?
10. ஆயிரம் தச்சன் கூடி அழகான மண்டபம் கட்டி ஒருவன் கண்பட்டு உடைந்ததாம் மண்டபம் அது என்ன?

## புதிர் தோட்ட விடைகள் 83

1 முடி
2 கதவு
3 மயில்
4 மயில்
5 தேன் கூடு
6 கண்ணிமை
7 விமானம்
8 சிறு படகு
9 மழை
10 சங்கு

## உறவுகள் 84க்கான சிறுவர் விவிலிய பதில்கள்

1) அந்திரேயா
2) என் பின்னே வாருங்கள் ,நான் உங்களை மனிதரைப் பிடிப்பவராக்குவேன்.
3) செபதேயுவின் மகன்.
4) அவர்கள் தங்கள் படகையும் தந்தையையும் விட்டு விட்டு அவரை பின்பற்றினார்கள்.
5) தங்கள் தந்தை செபதேயுவின் வலைகளை பழுது பார்த்து கொண்டிருந்தார்கள்.
6) தொழுகை கூடங்களில் கற்பித்தார், மக்களிடையே இருந்த நோய் நொடிகள் அனைத்தையும் குணமாக்கினார்.
7) மலை மீதுஏறி அமர்ந்து
8) ஆறுதல்
9) அமைதி ஏற்படுத்துவோர்
10) உப்பு

# தூய நற்கருணை



இயேசு இந்தப் பந்தியமர்வுகளில் சொன்ன, செய்த பல்வேறு நிகழ்வுகளின் பின்னணியில்தான் அவரது இறுதி உணவு அமைந்தது. சீடர்களின் பாதங்களைக் கழுவுதல், தனது வாழ்வின் இலட்சியத்தை அப்பம், இரசம் இரண்டு உணவுப் பொருள்களில் பொதித்துக் காட்டுதல் போன்ற செயல்கள் இந்த பந்தியமர்வின் தொடர் ஓட்டங்களே..

விருந்து என்பது பகிர்வு. பகிர்வு பாசத்தை வளர்க்கின்றது. பாசம் சில தீரச் செயல்கள் செய்ய பேராற்றலைத் தருகிறது. இந்த பேராற்றல் மேன்மைமிக்க சமுதாய மாற்றத்தின் இயக்க சக்தியாக அமைகிறது.

பல்வேறு விருந்துகள் வழியாக இறையரசின் செய்தியைச் சொன்ன இயேசு அதன் உச்சக்கட்டமாக இறுதி உணவை அமைத்து வைத்திருக்கிறார் என்பதுதான் பந்தியமர்வுகளுக்கும் இறுதி உணவுக்குமுள்ள தொடர்பு.

இயேசுவின் இறுதி உணவின் போது சொல்லப்பட்ட "இதை என் நினைவாகச் செய்யுங்கள்" என்ற வார்த்தைகள் ஆதித் திருச்சபையில் சடங்கு வடிவம் பெற்றன. யூத சமயத்திலிருந்து பிரிந்து தங்களுக்கு என்று தனிப்பட்ட வழிபாட்டு முறையை அமைத்துக் கொண்ட ஆதிக் கிறிஸ்தவர்கள் அப்பம் பிட்குதல்" என்ற பெயரில் ஆண்டவர் இயேசுவின் மரணத்தையும் உயிர்ப்பையும் கொண்டாடினர். ஆதிக் கிறிஸ்தவர்களின் வாழ்க்கையைச் சித்தரிக்கும் திருத்தூதர்பணி "அவர்கள், திருத்தூதர் கற்பித்தவற்றிலும், நட்புறவிலும் அப்பம் பிடுவதிலும் இறைவேண்டலிலும் உறுதியாய் நிலைத்திருந்தார்கள் (திப 2, 42–47) என்று கூறுகிறது. இந்த நான்கு நிகழ்வுகளையும் உள்ளடக்கியதாக நற்கருணை புதிய வடிவத்தோடு உருவாகியுள்ளது.

நட்புறவோடு அப்பம் பிட்டவர்கள் நலிந்தவர்களுக்கு உதவுதலை தங்கள் கடனாகக் கொண்டிருந்தனர். அப்பம் பலுகுதலுக்கும் நற்கருணைக்கும் உள்ள தொடர்பை எடுத்துக் காட்டும் யோவான் நற்கருணையின் மூலமாக பகிர்ந்து கொள்ளப்படும் வாழ்க்கைப் பரிமாற்றத்தை, இறைவார்த்தைக்கும் வாழ்வுக்கும் உள்ள தொடர்பை தெளிவாக விளக்குகிறார் (யோவான் 6) இஸ்ராயேல் மக்களுக்கு "மன்னா" வழி உணவாக அமைந்தது போல, புதிய வாழ்வை நோக்கிச் செல்லும் புதிய இஸ்ராயல் மக்களுக்கு நற்கருணை வலுவூட்டும் வழியுணவாக மாறுகிறது. அதே சமயம் வாழ்க்கைப் பகிர்விற்கும் அழைத்துச் செல்கிறது. பல்வேறு குழப்பங்கள் திருச்சபையைச் சந்திக்கின்ற நேரங்களில் நற்கருணை மக்களை நெறிப்படுத்தும் நற்செய்தியாக அமைவதை ஆதித்திருச்சபையின் வாழ்க்கையில் காணலாம்.

G.RATHINI



## விவிலிய குறுக்கெழுத்துப் போட்டி - 79

### வெற்றியாளர்கள்



### யோசுவா 1-24

1) திருமதி: றீற்றா செல்வரட்ணம்
2) திருமதி: டடிஸ்லோஸ் யோகமலர்
3) திருமதி: அமலினி கவிதா

1) செல்வி: லுசியா மேரி
2) செல்வி: சியாமளா யோசவ்
3) திருமதி: யோசவ் கெலன்
4) திருமதி: றொபின் கூட் சகிலா
5) திருமதி: கிறிஸ்ரி லூயிஸ் ஸ்ரெலா
6) திரு: செல்வநாயகம்
7) திரு: மரிய செல்வதாசன்
8) திரு: அன்று யோசப்பின்
9) திருமதி: சுரேந்திரன் றேணு
10) திருமதி: யேசுதாசன் ஜொய்ஸ்
11) திரு: அருளப்பு கிறிஸ்ரியன்

## வாழ்க வளமுடன் என வாழ்த்துவோம் அனைவரையும்




**பிறரை வாழ்த்துவதால் என்ன பயன்?**

பிரபஞ்சம் எண்ணங்களால் ஆனது. எண்ணங்களே உலகையும் ஆள்கிறது.

நம் வாழ்த்து அலைகள் மோதி பிரதிபலித்து எல்லா இடங்களிலும் நீக்கமற நிறைகிறது. இதனால் நாம் வாழ்த்தும் நபர் பலம் பெறுகிறார்.

அதுமட்டுமல்லாமல் வாழ்த்தும் நாமும், நலம் பெறுகிறோம். காரணம், நாம் என்ன அளிக்கிறோமோ அதுவே மீண்டும் நம்மை அடைகிறது.

எனவே, பிறரை வாழ்த்துவது, மறைமுகமாக நம்மை நாமே வாழ்த்துவதாக அமைகிறது.

இருப்பினும் பிரதிபலன் எதிர்பாராது பிறர் நலமுடன் இருக்க நாம் வாழ்த்தி மகிழ்வோம். நம் அறிவுரையை பிறர் கேட்காது போனாலும் கவலைப்பட வேண்டியதில்லை. நம் சொல்லால் கேட்க முடியாதவர், நம் வாழ்த்தின் மூலம், நம் உணர்வை புரிந்து கொள்வார்.

வாழ்த்தி மகிழ்வோம். " வாழ்க வளமுடன் "என இதைத்தான் வேதாத்திரி மகரிஷி அவர்கள் சிறப்புடன் வாழ்த்தின் மகிமையை பல்வேறு கோணங்களில் கூறுகிறார். நன்றி நண்பர்களே...

"வாழ்க வளமுடன்" வாழ்த்துவோம் அனைவரையும்.

## விவிலிய குறுக்கெழுத்துப் போட்டி 79 சரியான பதில்கள்

### யோசுவா 1 - 24

**இடமிருந்து வலம்**

1. இரக்கம் 2:12
5. போர் 10:29
8. எரு 10:1
9. பணி 24:14
10. ஊழியர் 1:13
14. இல்லை 18:7
16. சில 7:1
17. நதி 3:15
19. போது 9:13
22. உன் 6:2
23. நாட்டை 8:1
25. சாவுக்கு 2:19
26. இடம் 5:15
28. வாயில் 2:5
29. நீங்கள் 23:8
30. எரி 6:24
31. மழை 10:11
37. ஆள் 10:18

**மேலிருந்து கீழ்**

1. இது 7:20
2. ஓர் 20:4
3. எதிர்த்து 23:9
4. முன் 11:6
6. வழி 3:17
9. பல் 19:29
12. வரு 7:14
13. ஆசி 22:6
17. நன்கு 23:13
18. அடை 21:38
19. போல் 7:5
20. தாய் 7:25
30. எது 9:25
31. மண் 23:14
32. நாள் 4:9


**வலமிருந்து இடம்**

2. ஓடும் 3:15
3. எல்லை 17:18
4. முது 21:1
5. போடு 18:16
6. வர் 19:17
8. என்ன 15:18
12. வரை 20:6
15. கல்லை 4:5
17. நல 22:33
18. அமைதி 1:13
22. உள 7:2
23. நான் 3:7
27. வாழும் 3:10
32. நாளை 7:13
33. குல 7:14
39. மக்கள் 17:17

**கீழிருந்து மேல்**

7. நில் 10:12
8. எதைக் 4:6
9. படும் 13:14
10. ஊர் 17:16
14. இருக்க 14:12
17. நல் 21:45
18. அக 1:8
19. போக 6:1
20. தான் 22:11
21. ஒருவன் 12:24
24. மீது 2:19
28. வாய் 1:18
31. மலை 15:10
34. யோசுவா 11:15
35. போரில் 11:19
36. பேழைக்கு 6:7
38. கலகம் 22:19
39. மனாசே 17:8

## சிறுவர்களுக்கான விவிலிய வினா - 85



1)விளக்கினை ஏற்றி எதற்குள் வைப்பதில்லை?

2)மனிதர் முன்னிலையில் ஒளிர வேண்டியது யாது?

3)யார் யாருடைய நெறியை விட உங்கள் நெறி சிறந்திருக்கட்டும் என்று இயேசு கூறினார்?

4)இயேசு திருச்சட்டத்துடன் எதை அழிக்க வந்தேன் என நீங்கள் எண்ண வேண்டாம் என்றார் ?

5)விண்ணும் மண்ணும் ஒழிந்து போகும் முன் யாது நிறைவேறும் ?

6)கொலை செய்கிறவருக்கு நிகழ்வது யாது?

7)யார் தண்டனை தீர்ப்புக்கு ஆளாவார்?

8) தம் சகோதர,சகோதரிகளை முட்டாளே என்று சொல்பவருக்கு என்ன நடக்கும் ?

9)அறிவிலியே என்று சொல்பவருக்கு யாது நிகழும்?

10)எதிரி உங்களை எங்கு கூட்டிச் செல்லும் போது வழியில் அவருடன் விரைவாக சமரசம் செய்து கொள்ளும்படி இயேசு கூறினார்?

# விவிலிய அறிவுப்போட்டி - 79




1. அக்காலத்தில் விளக்கேற்றி யெருசலேமை நாம் சோதித்துப் பார்ப்போம். ஆண்டவர் நன்மையும் செய்வார் தீமையும் செய்வார் என்று உள்ளங்களில் சொல்லிக்கொண்டு யாரைத் தண்டிப்போம் என்று விசுவாசமற்றவர்களுக்கு எதிராக சொல்லப்படுகிறது?
2. ஆண்டவருடைய பலியின் நாளிலே யாரைத் தண்டிப்பதாகக் கூறப்படுகிறது?
3. ஆண்டவர் கூக்குரலும் நகரத்தின் புதுப்பேட்டையிலிருந்து புலம்பலும் யாருக்கு எதிராக எழுப்பப்படும்?
4. ஆண்டவரின் நாள் வரும் போது மனிதர்கள் குருடர்களைப் போல் தடுமாறுவார்கள் என்று ஏன் கூறப்பட்டது?
5. கலகஞ்செய்து தீட்டுப்பட்டவர்களும் கொடிய நகரமுமாகிய எந் நகர மக்களுக்கு ஐயோ கேடு என்று கூறப்படுகிறது?
6. படைப்பு அனைத்தின் மேலும் தீர்ப்பு வழங்கும் போது எவற்றை முற்றிலும் தொலைத்து விடுவோம் என்கிறார் ஆண்டவர்?
7. ஆண்டவருடைய முழுக்கோபம் உங்கள் மேல் வருமுன்பே நீங்கள் அனைவரும் ஆண்டவரைத் தேடுங்கள், அந்நாளில் ஒரு வேளை உங்களுக்கு ஆண்டவரிடமிருந்து என்ன கிடைக்கலாம் என்று கூறப்படுகிறது?
8. கிரேத்தியர்கள் வாழும் கடற்கரை யாருக்கு சொத்தாக அமைந்துள்ளது?
9. ஆண்டவருடைய கோபத்தின் நாளிலே அவரின் கோபத்தினால் உலகமெல்லாம் அழிக்கப்படும்போது எந்தப் பொருட்கள் உங்களை காப்பாற்ற மாட்டா என்று கூறப்படுகிறது?
10. வேற்றுத் தெய்வங்ளின் வழிபாட்டிற்கு எதிராக இறைவனாகிய ஆண்டவர் முன் மௌனமாயிருங்கள் என்று ஏன் கூறப்பட்டது?

## விவிலிய பொது அறிவுப்போட்டி முடிவுகள் ~ 78

**பதில்கள் (மிக்கேயாஸ் நூல்)**

1. தீர்க்கதரிசிகள் குறித்து 4:5
2. யெருசலேமின் வாயில் மேல் விழுந்தது. 1:12
3. மேய்ப்பர் எழுவரும் மக்கட்தலைவர் எண்மரும் காப்பார்கள். 5:5
4. பல நாட்டு மக்களால் கூறப்பட்டது. 4:2
5. இஸ்ராயேல் மேல் ஆட்சி செலுத்துபவன் அவர்கள் கோலால் கன்னத்தில் அடிபடுகிறான். 5:5
6. அவனே மக்களுக்குகந்த தீர்க்கதரிசி எனக்கூறப்படுகிறது. 3:11
7. யாக்கோபு வீட்டாரின் தலைவர்கள் 4:9
8. ஆண்டவரின் கோயில் அமைந்துள்ள மலை நோக்கி 4:4
9. யாக்கோபின் தலைவர்களே இஸ்ராயேல் வீட்டாரை ஆள்பவர்களே கேழுங்கள் என்று கூறப்பட்டது. 3:3
10. மோவாப் அரசன் பாலாக் செய்த திட்டத்தையும் பேயாக்கின் பாலாம் சொன்ன பதில் குறித்து 6:5

## சிறுவர்களுக்கான ஒன்று கூடல்



பேர்னில் சிற்றாலயத்தில் நேரம்: 9:00க்கு

02-01-2023
05-02-2023
03-03-2023




### திருத்தூதர் பணிகள்

திருத்தூதர் பணிகள் என்னும் பெயரால் வழங்கும் நூல் இயேசுவின் மரணத்துக்கு பின்னரான தொடக்க காலக் கிறிஸ்தவரின் வாழ்வைச் சித்தரிக்கிறது. பேதுரு, பவுல் ஆகிய திருத்தூதர்கள் அறிவித்த படிப்பினையையும், பவுல் மேற்கொண்ட பயணங்களையும் இந்நூல் விரிவாகத் தருகிறது. இந்நூல் லூக்கா நற்செய்தியை எழுதியவராலேயே எழுதப்பட்டது என்பது ஏற்றுக்கொள்ளப்பட்ட கருத்தாகும். பவுல் கூறியவற்றை லூக்கா எழுதினார் என்பது மரபு.

### புனித பவுல் எழுதிய திருமுகங்கள்

உரோமையருக்கு எழுதிய திருமுகம்
கொரிந்தியருக்கு எழுதிய முதல் திருமுகம்
கொரிந்தியருக்கு எழுதிய இரண்டாம் திருமுகம்
கலாத்தியருக்கு எழுதிய திருமுகம்
எபேசியருக்கு எழுதிய திருமுகம்
பிலிப்பியருக்கு எழுதிய திருமுகம்
கொலோசையருக்கு எழுதிய திருமுகம்
தெசலோனிக்கருக்கு எழுதிய முதல் திருமுகம்
தெசலோனிக்கருக்கு எழுதிய இரண்டாம் திருமுகம்
திமொத்தேயுவுக்கு எழுதிய முதல் திருமுகம்
திமொத்தேயுவுக்கு எழுதிய இரண்டாம் திருமுகம்
தீத்துவுக்கு எழுதிய திருமுகம்
பிலமோனுக்கு எழுதிய திருமுகம்
எபிரேயருக்கு எழுதிய திருமுகம் (இதன் ஆசிரியர் பவுல் அல்ல என்பது இன்றைய ஆய்வாளர் கருத்து)

### பொதுத் திருமுகங்கள்

யாக்கோபு எழுதிய திருமுகம்
பேதுரு எழுதிய முதல் திருமுகம்
பேதுரு எழுதிய இரண்டாம் திருமுகம்
யோவான் எழுதிய முதல் திருமுகம்
யோவான் எழுதிய இரண்டாம் திருமுகம்
யோவான் எழுதிய மூன்றாம் திருமுகம்
யூதா எழுதிய திருமுகம்

### வெளிப்படுத்தல்

**யோவானுக்கு அருளப்பெற்ற திருவெளிப்பாடு**

இவற்றில் முதல் மூன்று நூல்களும் தமக்குள் உள்ளடக்கம், நடை போன்றவற்றில் மிகவும் ஒத்தவையாகும். எனவே அவை ஒத்தமை நற்செய்திகள் (Synoptic Gospels) என அழைக்கப்படுகின்றன

(முற்றும்)

# திருக்கெழுத்து புதிர்

## போட்டி இலக்கம் 79

### நீதித் தலைவர்கள் (1-21 அதிகாரங்கள்)

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | 2 | | | | 3 | 4 |
| | 5 | | | | 6 | | 7 | | |
| | | 8 | | | | 9 | | | |
| | | | 10 | | 11 | | | | |
| | | 12 | | | | | 13 | | |
| | | | 14 | | | 15 | 16 | | |
| 17 | | | | 18 | | | | 19 | 20 |
| 21 | 22 | | | | | | 23 | 24 | |
| | 25 | 26 | 27 | | | 28 | | | |
| 29 | | | | | 30 | 31 | 32 | | 33 |

**இடமிருந்து வலம்**

1. என்............அடைக்கலம் புகுங்கள்.
5. இவற்றை எல்லாம்.............யிருக்க மாட்டார்.
6. தீப்பிழம்பு..........நோக்கி மேல் எழும்பியது.
9. ..........எபூசக்குச் சென்று அங்கே இரவைக் கழிப்போம்.
11. .............மக்கள் அனைவரும் ஒன்று திரண்டனர்.
13. கதிரவன்............வாழட்டும்.
18. .............அளிக்க ஒருவரை எழச் செய்தார்.
29. பென்ஜமின்................அங்கு திரும்பி வந்தனர்.

**வலமிருந்து இடம்**

4. முந்நூறு பேரும் எக்காளம்................
7. .......உறவுப் பெண்களிடையே யாரும் இல்லையா?
11. சிங்கத்தினும் வலியது ..........
12. தேன்கூடும்............. காணப்பட்டன.
13. நூல் கயிற்றைப்.............
14. அங்கு...........மாதம் தங்கியிருந்தாள்.
18. மிஸ்பா..........பாளையம் இறங்கினர்.
20. ஆண்டவரின்..........இப்தாவுக்கு அருளப்பட்டது.
23. நக்கிக் குடித்த முந்நூறு.............
31. .............அவருடன் மூன்று நாள்கள் தங்கினார்.
33. நீயே எழுந்து எங்களைத்.............

**மேலிருந்து கீழ்**

1. உம் வார்த்தைகள்................பொழுது
2. .............காமோனில் அடக்கம் செய்யப்பட்டார்.
3. .............வில் ஒரு பெண்ணைக் கண்டேன்.
4. ஆண்டவருக்கு .............புரிந்து வந்தனர்.
5. .............ற்ற யாருமில்லை.
7. நீர்.......... ஊழியன் மூலம்
8. ............. வாயை மூடு.
11. ............ எதையும் மறைக்காமல் —கூறியது.
15. ஆண்டவரின்.............அவர் பார்வையிலிருந்து மறைந்தார்.
18. கடவுள் உங்கள் கையில் ஒப்புவித்து.............
20. எஸ்போனில்.............செய்த
21. உங்கள் கையில்.............வித்து விட்டார்.
24. இஸ்ராயேலில்..........த் தலைவராக விளங்கினார்.
25. ஆண்டவர்..........வின் மக்களுடன் இருந்தார்.
(த தா என மருவியுள்ளது.)
26. ஒரே கல்லின்.........வைத்துக் கொன்றீர்கள்.

**கீழிருந்து மேல்**

7. ..........க்கு ஆயிரத்துநூறு வெள்ளிக்காசு தருவோம்.
9. ..........உங்களைப் பழி வாங்கும் வரை ஓயமாட்டேன்.
10. அது மீக்காவின்............... இருந்தது.
11. இந்தக் கொடிய நிகழ்ச்சி................ நிகழ்ந்தது?
14. அவருடன் மூன்று..........கள் தங்கினார்.
16. .................. நீதித் தலைவியாக இருந்தார்.
17. எதில் உமது .............வலிமை உள்ளது.
18. நீதித் தலைவர்கள் என்னை விடுவிக்க வர............
19. எனது ஆற்றல் என்னிடமிருந்து அகன்று..........ம்
20. ................பேரைக் கொன்றார்.
22. ............எதுவும் செய்ய வேண்டாம்.
26. ..........அவர்கள்—ஒப்புக் கொடுத்தனர்.
27. உயிரைக்............... பிடித்துக் கொண்டு
28. ........கூறியபடி நாங்கள் செய்வது உறுதி.
30. ............. மிக்க வீரனே
31. உயர்..........யினர் பீடு நடை போட்டனர்.

## ஒரு நாளை மிகச் சிறந்த நாளாக மாற்ற

ஐந்து முக்கிய விஷயங்களை கடைபிடிக்க வேண்டும். அவை :

**1 நன்றி**
**2 பாராட்டு**
**3 உதவி**
**4 மன்னிப்பு**
**5 கற்பது....**

இவற்றை நடைமுறை வாழ்வில் பின்பற்றுவதன் மூலம் ஒவ்வொரு நாளையும் மிகச் சிறந்த நாளாக மாற்ற முடியும்...

**குறுக்கெழுத்து போட்டியின் விடைகளை தயவு செய்து 05-03-2023 க்கு முன்பு பணியகத்திற்கு அனுப்பி வையுங்கள். நன்றி**

## இறைவார்த்தை

அன்பர்களே, நம்பிக்கை கொள்ளாத தீய உள்ளம், வாழும் கடவுளை விட்டு விலகும். இத்தகைய தீய உள்ளம் உங்களுள் எவருக்கும் இராதபடி பார்த்துக் கொள்ளுங்கள். உங்களுள் எவரும் பாவத்தால் ஏமாற்றப்பட்டு, கடின உள்ளத்தினர் ஆகாதவாறு, ஒவ்வொரு நாளும் இன்றே என எண்ணி, நாள்தோறும் ஒருவருக்கொருவர் அறிவுரை கூறுங்கள். (எபி:3:12-13)

# பணியகச் செய்திகள்



**தி**ருமண ஆயத்தம் பெற விரும்புவோர் 3 மாதத்திற்கு முன்பாக அருட்பணியாளருடன் தொடர்பு கொள்ளவும்.

**01-10-2022 ஞாயிறு 9 மணியிலிருந்து**
**06-11-2022 சனி 9 மணியிலிருந்து திருமண அருட்சாதன வகுப்பு, பெல்வில் சிற்றாலயத்தில் நடைபெறும்.**

**தி**ருமுழுக்கு ஆயத்தம் பெற விரும்புவோர் ஒரு மாதத்திற்கு முன்பாக அருட்பணியாளருடன் தொடர்பு கொள்ளவும்.



### வளர்ந்தோருக்கு - திருமுழுக்கு ஆயத்த வகுப்பு

ஜனவரி: புதன் 25ந் திகதி - 17:30-18:30
ஜனவரி: சனி 28ந் திகதி - 17:30-18:30
பெப்: புதன் 22ந் திகதி - 17:30-18:30
பெப்: சனி 25ந் திகதி - 17:30-18:30
மார்ச்: புதன் 22ந் திகதி - 17:30-18:30
மார்ச்: சனி 25ந் திகதி - 17:30-18:30

### சிறுவர்களுக்கு - திருமுழுக்கு ஆயத்த வகுப்பு

ஜனவரி: புதன் 25ந் திகதி - 18:30 - 20:00
ஜனவரி: சனி 28ந் திகதி - 18:30 - 20:00
பெப்: புதன் 22ந் திகதி - 18:30 - 20:00
பெப்: சனி 25ந் திகதி - 18:30 - 20:00
மார்ச்: புதன் 22ந் திகதி - 18:30 - 20:00
மார்ச்: சனி 25ந் திகதி - 18:30 - 20:00

**பெல்வில் ஆலயத்தில் நடைபெறும்**

## விவிலிய பொது அறிவுப்போட்டி 78
## பரிசு பெறுபவர்கள்

### யோவான் ஆகமம்

1) திருமதி: றொபின் கூட் சகிலா
2) திருமதி: மேரி பீல்டா யோண்சன்

ஏனையவர்கள்:

1) திருமதி: றீற்ரா செல்வரட்ணம்
2) திருமதி: அமலினி கவிதா
3) திருமதி: மரிய செல்வதாசன் ஜெநந் எலிசபேத்
4) திருமதி: சுரேந்திரன் றேணு
5) செல்வி: சியாமளா யோசவ்
6) திருமதி: கொன்சன்ரைன் கருணாமலர்
7) செல்வி: லுசியா மேரி
8) திருமதி: யேசுதாசன் மேரி ஜொய்ஸ்
9) திரு: டெரிக் அமலதாஸ்
10) திரு: மரியநாயகம்
11) திரு: அன்று யோசப்பின்
12) திருமதி: லோறன்ஸ் அன்ரனி யசிந்தா
13) திருமதி: கிறிஸ்ரி லூயிஸ் ஸ்ரெலா

அருட்பணி: போல் மத்தியூ மதன்ராஜ்
பணியக இயக்குனர்

## தை - பணியகத் திருப்பலிகள்

**15- 01-2023 குழந்தை இயேசு பணித்தள விழா**
12:30 Saint Yves - 93330 - La Courneuve

**29- 01-2023 புனித செபஸ்தியார் திருவிழா**
11:30 Chapelle NDR. de Belleville – 75011 - Paris

## மாசி - பணியகத் திருப்பலிகள்

**05-02-2023 -புனித டொன்பொஸ்கோ திருவிழா**
12:30 Eglise St. Joseph des Nations-75011-Paris

**22- 03-2022 - திருநீற்றுப்புதன்**
17:00 Chapelle NDR. de Belleville –75011 - Paris

## ஜெபத்தின் வல்லமை..!

* ஜெபம் உங்களை தேவனோடு இணைக்கிறது.
  ஜெபம் உங்களைச் சுற்றியுள்ள சத்துருவின் கட்டுகளை உடைக்கிறது.
* நீங்கள் ஜெபிக்கும் பொழுது பிசாசு உங்களைக் கண்டு நடுநடுங்குகிறான்.
* நீங்கள் ஜெபிக்கும் பொழுது உங்களுக்கும் தேவனுக்கும் உள்ள உறவு பலப்படுகிறது.
* நீங்கள் ஜெபிக்கும் போது தேவப்பிரசன்னம் உங்களை சூழ்ந்து கொள்கிறது.
* நீங்கள் ஜெபிக்கும் பொழுது அற்புதங்கள் நடக்கிறது.
  நீங்கள் ஜெபிக்கும் பொழுது உங்கள் சாபங்கள் மாறுகிறது.
* ஒரு வெற்றியுள்ள கிறிஸ்தவ வாழ்க்கைக்கு அடிப்படையே ஜெபம்தான்.
* ஜெபிக்க ஒருபோதும் மறவாதிருங்கள்.
* ஜெபத்திற்கென்று ஒரு குறிப்பிட்ட நேரத்தை ஒதுக்குங்கள்.
* – தேவன் தாமே உங்கள் ஜெப நேரத்தை ஆசீர்வதிப்பாராக..! ஆமென்..! அல்லேலூயா..!

## புத்தாண்டில்........




பிறக்கும் போது பிறந்த நாள்.
இறக்கும் போது பிரிந்தநாள்.
பிறக்கையில் அழுகை.
இறக்கையிலும் அழுகை
பிறந்தவுடன் ஆணந்த நிகழ்வு
இறந்தவுடன் ஆழ்ந்த இரங்கல்
வாழும்போது நினைவெல்லாம் நீயே
இறந்தவுடன் உன் நினைவில் வாழும்
உயிருள்ளபோது பணம், சினம், ரணம், தலைக்கணம்.
உயிர் பிரிந்தவுடன் வெறும் பிணம்.
இவ்வளவுதான் வாழ்க்கை.
வாழும்போதே அனைத்தையும் அனுசரித்து வாழ்ந்து விடுங்கள்.
கஷ்டம், நஷ்டம் இருந்தாலும் இஷ்டப்பட்டு வாழ்க்கையை வாழுங்கள். இன்னுமொரு புதுப்பிறவியாய் புதிய ஆண்டில் கால் பதிப்போம்.

# இலங்கைத் தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப் பணித்தளங்களின் திருவிழாக்கள்

## செனார்





## ஆஜென்தைல்





## கிறித்தல்





## கிளிச்சி சூ புவா





## செல்



